# பாதுகாவலன்
PATHUKAVALAN

பாதுகாவலன்
தனிப்பிரதி ரூபா 1-50
தபால் மூலம் தனிப்பிரதி
ஆண்டு சந்தா ரூபா 100/-
தினமும் வாசகர்கள் பெருகிக்கொண்டு இருக்கிறார்கள். இவ்வாரம் 6335 பத்திரிகைகள் அச்சிடப்பட்டுள்ளன. இன்னமும் முன்னேற இடமுண்டு. எனவே வாசகர்களை ஊக்குவியுங்கள்.
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம்

மலர்: 115 இதழ்: 17 28-4-1989 (ஏப்ரல் 28— மே 5) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


University of Jaffna Sri Lanka RECEIVED 1989 5-1 Periodicals Library

வெள்ளிவிழாக்காணும் மதங்களுக்கிடையே கலந்துரையாடலுக்கான திருத்தந்தையின் சபை விடுக்கும் றம்ழான் செய்தி:

# மனிதன் பலவீனத்தை உணரும்போது இறைபலத்தில் நம்பிக்கை பிறக்கிறது

**றம்ழான் நோன்பு, மே 7 ஈதுல் பெருநாளை முன்னிட்டு றம்ழான் செய்தியை வெளியிட்டுள்ள திருச்சபை இஸ்லாமியரும் கிறிஸ்தவரும் ஒரே சர்வேசுரனை விசுவசிப்பதால் கொண்டுள்ள உறவைச் சுட்டிக்காட்டி, நோன்பின் மூலம் மனிதன் பெறும் நன்மைகளை எடுத்துணர்த்தி, மதங்களுக்கிடையே புரிந்துணர்வை வளர்க்க அழைப்பு விடுத்துள்ளது.**

மே மாதம் 7 ஆம் திகதி றம்ழான் நோன்பு முடிவடையும் போது இஸ்லாமியர் ஈதுல் பெருநாளைக் கொண்டாடுகின்றனர். மதங்களுக்கிடையே கலந்துரையாடலுக்கான திருத்தந்தையின் சபையின் தலைவர் கருதினல் பிரான்சிஸ் அரின்ஸ் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார்.

இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் எமது சபை கடந்த பல வருடங்களாக ஒரே இறைவனை வழிபடும் உங்களுக்கு எமது நட்புறவையும் சகோதரத்துவத்தையும் வெளிக்காட்டி உங்கள் நோன்பினை நாம் மதிப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

நோன்பின் மூலம் மனிதன் தன் பலவீனத்தை உணர்ந்து இறை பலத்தில் நம்பிக்கை கொள்ளத் தூண்டப்படுகிறான். நோன்பு நம்மில் ஒரு சமூக உணர்வை உருவாக்குகிறது. நோன்பு உள்ளவனையும் இல்லாதவனையும், செல்வந்தனையும் ஏழையையும் அருகருகே கொண்டுவருகிறது. சமூகத்தில் ஒப்புரவை உருவாக்குகிறது.

ஈதுல் பெருநாளில் நாங்கள் உங்களை வாழ்த்தி நாம் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள எடுக்கும் முயற்சியை இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம் என தமது றம்ழான் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கில் "அழைத்தல்"

பருத்தித்துறைப் பங்கைச் சேர்ந்த யுவதிகளுக்கான இருநாட் கருத்தரங்கு சித்திரை மாதம் 20 ஆம் 21 ஆம் திகதி பருத்தித்துறை சென். தோமஸ் றே. க. பெண்கள் பாடசாலையில் இடம்பெற்றது. கார்மேல் கன்னியர் சபையைச் சேர்ந்த அருள்சகோதரிகள் மனோ, எலிசபெத், பற்றிமா ஆகியோரால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கு இருநாட்களும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. முதல் நாள் அமர்வில் அன்பு, தொடர்பு என்னும் பொருளில் தமது கருத்துக்களை இளம் பெண்களுடன் அருள்சகோதரி பகிர்ந்துகொண்டார். இளம் பெண்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு இயேசுவின் வாழ்வில் அன்பைப் பிரதிபலிக்கின்ற வகையில் நற்செய்தியில் இடம்பெறுகின்ற சம்பவங்களை திறம்பட நடித்துக்காட்டினர். சமூகத் தொடர்பு பற்றிய விமர்சனமும், அன்றாட வாழ்வில் அதன் தேவை பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது. மறுநாள் அமர்வில் வாழ்க்கை என்னும் பொருளில் நான் யார்? முழுமனித முன்னேற்றம் போன்ற தலைப்புகளில் அருள்சகோதரிகள் கருத்துக்களை அளித்து, உரையாற்றினர். அன்றைய அமர்வில் இறையழைத்தல் பற்றிய கருத்துக்கள் பரிமாற்றமும், உரையும் இடம்பெற்றன. "அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு" என்று மொழிந்த இயேசுவின் வார்த்தையோடு ஒப்பிட்டு இறையழைத்தலின் தன்மை, நோக்கம், இக்கால கட்டத்தில் அதன் அவசியம் பற்றி தெளிவாக எடுத்துக்கூறப்பட்டு உரை நிகழ்த்தப்பட்டது. இறுதியாக நன்றி நவிலலுடன் கருத்தரங்கு முடிவுற்றது.

அ. மோசேஸ் தேவரத்தினம்.
தும்பளை
பருத்தித்துறை.

## சுயதொழில் வாய்ப்பு

ஏப்ரல் 15 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் பங்குத் தந்தை அருள் திரு நேசராஜா R.C.X. அடிகளாரால் தையல் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. பங்குத்தந்தை தமது உரையில் தையல் பயிற்சிபெற வந்திருக்கும் பிள்ளைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கக் கூடிய பல கருத்துக்களை வழங்கினர்.

இப்பயிற்சியானது தொடர்ந்து செயற்படுவதற்கு ஆரம்ப பயிற்சியில் தற்பொழுது ஈடுபட்டிருக்கும் பிள்ளைகளின் ஒத்துழைப்பு அவசியமானதென்பதையும், இவர்களைத் தொடர்ந்து மீண்டும் இப்பங்கில் பல பிள்ளைகள் இப்பயிற்சியில் பங்குபற்றி தமது திறமைகளை வளர்த்துக் கொள்வதன் வழியாக சுய தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் கூறி பயிற்சிக்கான சகல உதவிகளையும் அளித்த யா/மனித முன்னேற்ற நிலையத்திற்கும் தமது அளப்பெரும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். விடாமுயற்சியுடன் கூடிய ஒத்துழைப்பின் வழியாக அவர்களுக்கு நாம் என்றும் நன்றிக்கடன் உள்ளவர்களாக இருக்க முடியும் என்பதனையும் எடுத்துக் கூறினர்.

தமது விடாமுயற்சியினால் எமக்கு இப் பயிற்சி நிலையத்தை ஒழுங்கு செய்து தந்த எமது பங்குத் தந்தைக்கும், இவ்வுதவிகளை அளித்த யா/மனித முன்னேற்ற நிலயத்திற்கும் பங்கு மக்கள் சார்பில் சகோதரி ஒருவர் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.


தகவல்: A. R., J. R.

## மன்னாரில் மே தினத்தில் புதிய ஆலய அபிஷேகம்

மன்னார் மறைவட்டத்திலே கயல்பாயும் கடலோரத்திலே புனித சூசையப்பரின் பாதுகாவலில் அமைந்துள்ளது தாழ்வுபாடு. நானூற்றுஐம்பதுக்கு மேற்பட்ட கிறிஸ்தவக் குடும்பங்களைக் கொண்ட இவ்வூர், இறைவனுக்கென்று புதிய பிரமாண்டமான ஆலயம் ஒன்றைக் கட்டி மகிழ இருக்கின்றது. இதற்கு முதல் இங்கு ஒரு ஆலயம் இருக்கவில்லை என்ற அர்த்தம் இல்லை. மாறாக, பெரியதொரு ஆலயம் இருந்தது. ஆனால் வீடுகளை அழகுற அமைத்து விட்டு இறைவன் வாழும் ஆலயத்தை கைவிடுதல் முறையல்ல என்பதாலும், அதிகரித்து வருகின்ற கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையை ஈடு செய்யும் நோக்குடனும் எம் பங்கின் தந்தை அருள்திரு. எமிலியானுஸ்பிள்ளை. அவர்களின் அயரா உழைப்பினாலும், அருள்திரு. லூயிஸ் பொன்னையா அ.ம.தி. அவர்களின் ஆலோசனையின் பேரிலும், இவ்வூரில் வாழுகின்ற ஒவ்வொரு கிறிஸ்தவனின், கிறிஸ்தவளின் கடின உழைப்பினாலும் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் இவ்வாண்டு மே மாதம் முதல் நாள் மன்னார் மறைவட்ட ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது. அந்நாளை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் மக்களோடு நாமும் இறைவனைப் புகழ்வோம்.

தகவல்: செ. அந்தோனிமுத்து [ரவி].

இது தாழ்வுபாடு
புனித வளனார் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம் கருத்து

### தொழிலின் மகத்துவம்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஓர் அங்கமான உலக உணவு விவசாய ஸ்தாபனம் (F. A. O.) பட்டினியை எதிர்நோக்கும் பதினைந்து வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என தெரிவித்திருக்கிறது.

சூடான், எத்தியோப்பியா, பங்களாதேஷ், சோமாலியா, அங்கோலா, ஹெய்டி, ஜமேக்கா, லாவோஸ், மொஸாம்பிக், நிக்கரகுவா, பெரு, சியரா லியோன், வியட்னும் ஆகியவையுடன் இலங்கையும் பட்டினியை எதிர்நோக்கும் நாடுகளில் ஒன்ருக எண்ணப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்திக்கு கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்ட ஒரு நாடு, அரிசி உற்பத்தியில் தன்னிறைவு கண்டு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிருேம் என தம்பட்டம் அடித்த நாடு இன்று பட்டினியை எதிர்நோக்கி நிற்கின்றது.

தெற்காசிய நாடுகளில் இரண்டு நாடுகள் மட்டுமே இந்தப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன ஒன்று பங்களதேஷ்; மற்றது ஸ்ரீலங்கா.

அரசியல் நிலைமை இயற்கை அழிவு ஆகிய இரு காரணிகளை முன்வைத்து இவ்விருநாடுகளும் தம்மைப் பட்டினிச் சாவுக்கு உட்பட்ட நாடுகளாகப் பறைசாற்றுகின்றன.

எமது நாட்டில் வரட்சியின் காரணமாக உணவு உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் அம்பாறை, மட்டக்களப்பு, மன்னர், முல்லைத்தீவு ஆகியபகுதிகள் வழமையான பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியவில்லை.

மேற் கூறப்பட்ட காரணங்களால் உணவு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ள போதிலும் எமது நாடு பட்டினியை எதிர் நோக்கும் நாடுகளில் ஒன்ருக எண்ணப்படுவது எந்த அளவுக்கு பொருந்தும் என்று ஆராய்வது அவசியம்.

பிச்சைக்காரன் தனது புண்களை மூலதனமாகக் கொண்டே பிச்சை எடுக்கிருன். தனது புண்ஆறினுல் உழைத்தே உண்ணவேண்டும் என்று புண்ணை மாற்றிக்கொள்ள விரும்பமாட்டான்.

சுய கௌரவம் கொண்ட எந்த நாடும் தன்னை இந்நிலைக்கு தள்ளிவிடுவதற்கோ, இவ்வாறு எண்ணப்படுவதற்கோ இடம் கொடுக்க முன்வராது.

இலங்கை அரசு இனப்பிரச்சினை காரணமாக தன் செலாவணியில் 40% இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வந்துள்ளது. இதன் காரணமாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு இடப்பட்ட மூலதனம் வெகுவாகக் குறைந்தது.

போரின் காரணமாக இடம்பெயர்வு, அகதிகள் ஆக்கப்பட்டமை உற்பத்தி வீழ்ச்சியடைய மேலதிக காரணிகளாயின.

இவை இரண்டையுமே தனது மூலதனமாகக் கொண்டு இன்று எமது நாடு தனது மக்களின், நாட்டின் கௌரவத்தை, மானத்தை, மரியாதையை காற்றிலே பறக்க விட்டுவிட்டது.

மேதினம், தொழிலாளர் தினம், தொழிலின் மாண்பினை உணரும் தினம், தொழிலாளரைப் போற்றும் தினம், தொழிலை ஊக்குவிக்கும் தினம்.

நோயை வளர்த்து, வருவாயைப் பெருக்கும் பிச்சைக்காரத்தனத்தை விட்டு, உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து உற்பத்தியை ஊக்குவிக்க நாட்டு மக்கள் அனைவரும் திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

போரின் அழிவுகள் மத்தியிலும், இயற்கையின் சீற்றத்தால் எழுந்த உணவு உற்பத்தி வீழ்ச்சியின் மத்தியிலும் மக்களுடைய வாழ்க்கை நிலை உயர வழி சமைக்க முடியும் என்ற உறுதியோடு, இடர்களைத் தவிர்த்து முன்னேற்றத்தை ஊக்குவிக்க வேண்டும்.

கடந்த காலத் தவறுகள் உணரப்பட்டு புதிய வழிகள் நோக்கப்படும் இக்காலகட்டத்தில் சுய கௌரவத்தை விட்டுக்கொடுக்காது மானத்தோடு வாழ வழிகாண வேண்டும். மக்கள் சக்தியிலும் தொழில் திறமையிலும் மூலதனமிட்டு உற்பத்தியைப் பெருக்குவோம்; நாட்டைக் காப்போம்.

---

## தேனருவி:

பாஸ்கு 7ஆம் ஞாயிறு (07–05–89)

### எல்லோரும் நலம் வாழ

''ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே வேற்றுமையை வளர்ப்பதனுலே விளையும் தீமையே'' என்று பாடும்போது அறிந்துகொண்டும் செய்யும் எமது தவறுகள் தான் எம் மனக்கண்முன் வருகின்றன. வேற்றுமையில் விளைவது தீமையே என்று அறிந்தும் அந்த இராட்சதனுக்கு நாம் ஒவ்வொருவரும் சொல்லாலும் செயலாலும், தீனியை அள்ளிப் போடுகின்றேம்.

தமக்குள்ளே சண்டை சச்சரவுகளை வளர்த்துக்கொண்டிருந்த பிள்ளைகளின் தகப்பன் ஒருவர் தமது மரணப்படுக்கை தமது இறுதி விருப்பத்தை ஆணித்தரமாக எடுத்துக்கூற விரும்பினுர். ஒவ்வொரு பிள்ளையையும் விறகு, தடி ஒன்று கொண்டுவரச் சொன்னுர். அவற்றை ஒன்ருகச் சேர்த்துக் கட்டிவிட்டு அக்கட்டை முறிக்குக் கேட்டார். அவர்களோ முயன்றும் தோல்வி கண்டனர். பின்பு கட்டை அவிட்டுவிட்டு ஒவ்வொன்ருக முறிக்கச்சொன்னுர். அவர்களோ சுலபமாக முறித்து எறிந்து விட்டனர். மனித சமூகத்தை பலவீனப் படுத்த பலத்த ஆயுதங்களால் மிரட்டி, பொருளாதார தடைகளை விதிக்கவேண்டிய அவசியமில்லை. மாருக ஒருவரை அடுத்தவருக்கு எதிராகத் தூண்டிவிட்டாற்போதும்.

பிரிவினையும் பேதங்களும், கிறிஸ்தவத்திற்கு முற்றும் முரணனவையாகும். குடும்பத்திலும், நாட்டிலும் அக்கறை கொண்டவர்களின் ஓயாத வேண்டுதல் ஒற்றுமைதானே. தம் தந்தையை நோக்கி உருக்கமாக வேண்டுகிற யேசு ''நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல அவர்களும் நம்முள் ஒன்ருக இருக்கும்படி மன்ருடுகிறேன்'' என செபிக்கின்ருர். கிறிஸ்தவத்திற்கு அடையாளம் சிலுவை, கிறிஸ்தவர்களுக்கு அடையாளம் ஒற்றுமை. ஆனுல் கிறிஸ்தவர்களிடையே இன்று எத்தனை பேதங்கள். மதத்தை வளர்க்கவேண்டும், மொழியையும் கலாச்சாரத்தையும் பேணவேண்டும், இனத்தையும் நாட்டையும் பாதுகாக்கவேண்டும் என்ற விருதுகொண்டு எத்தனை கொலைகள், எத்தனை அட்டூழியங்கள், எத்தனை ஏமாற்றுக்கள் நடைபெறுகின்றன.

மதம், இனம், மொழி, கலாச்சாரம், செல்வம் அனைத்தும் மனிதனுக்கே. அதனுல் மனிதன்தான் அனைத்திற்கும் மையமும் அனைத்திலும் முக்கியத்துவமுமானவன். முதலாம் வாசகத்தில் முடியப்பரை கல்லால் எறிந்து கொன்ருர்கள். எறிபவனும், வீழ்பவனும் ஒரே மனித இனத்தையே சார்ந்தவன். அதனுல் ஒரு விதத்தில் மனிதன் தற்கொலையே செய்து கொண்டிருக்கிருன்.

இன்று நம்மைச் சூழ ஒவ்வொருநாளும் நடைபெறும் கொலைகளையும் சித்திரவதைகளையும், அநியாயங்களையும் எம் மனம் சகிக்கமுடியாமல் வேதனைப்படுகின்றது. கல்லால் எறிபவர்களின் மேலாடைகளுக்கு காவல் காத்த சவுல் என்ற இளைஞன் போன்று பலரும்- படித்தவரும் பண்புடையவரும் கூட பிரிவினை நெருப்புக்கு எண்ணை வார்க்கிருர்களே. பழி வாங்கும் பேச்சுக்களையும் கோப உணர்வுகளையும், வளர்க்கிருர்கள். ஒற்றுமைக்காக மன்ருடிய இயேசுஒரேயொரு ஆயுதத்தை இறுதிவரை கைவிட மறுத்தார். அதுதான் சிலுவையில் தம்மைக் கொன்றவர்களுக்காகவும், மன்னிக்க மன்ருடினுர். அதே போன்று வேதசாட்சியான முடியப்பரும் ''ஆண்டவரே இப்பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்'' என்று பரிந்துரைக்கிருர்.

வேற்றுமையைமன்னிப்பால் முறியடிக்கும் ஒவ்வொரு கட்டமும் ஒற்றுமை என்ற கட்டிடத்திற்கு நாம் ஒவ்வொருவரும் வைக்கும் வளர்ச்சிக்கல்லாகும். ''கல்லால் எறிந்து'' தீமையை விளைவிக்காது நன்மையுண்டாகவும் எல்லோரும் நலம் வாழவும் அடிக்கல் ஒன்று வையுங்களே.

சுவாமி ஜீவாபோல், அ.ம.தி.

---

அப். பணி. 7 : 55 - 60 முடியப்பரைக் கல்லால் எறியத்தொடங்கினர்.

திருவெளி. 22 : 12 - 20 ஆண்டவராகிய இயேசுவே வாரும்

அரு. 17 : 20 - 26 ஒருமைப்பாட்டின் நிறைவை எய்துவார்களாக.

---

### ''விரிந்த வில் வாகனத்தேறினுர்'' வீரமாமுனிவர் கூறும் விண்ணேற்றம்

**(தேம்பாவணி: முடிசூட்டு படலம் பாடல், 1—17)—புலவர் நீ. மரிய சேவியர்**

தேம்பாவாணியின் ஆசிரியர் வீரமாமுனிவர் தன் காப்பியத்தின் தன்னிகரற்ற தலைவனுகிய வளனைச் (சூசை) சிறப்பிக்கும் வகையில், திருநூலில் இல்லாத ஒன்றைத் தன் கற்பனைத் திறத்தால் தீட்டுகிருர்: இயேசு உயிர்த்து எழும் நிகழ்ச்சியுடன் வளனையும் திருமகன் இயேசுவின் அருளால் உயிர்த்து எழச் செய்கின்ருர். அதன்பின் இயேசுவின் விண்ணேற்றத்திலும் வளனுக்குப் பங்களிப்பை வழங்குகின்ருர். விண்ணேற்ற நிகழ்ச்சியைப் பற்றிய பாடல்கள் கற்பனையில் உருவாகியன என்றபோதிலும், கருத்துப் பொதிந்த விண்ணேற்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டவை.

அன்பின் அமலன் இயேசு உயிர்த்தபின் அவரைக்கண்டு எல்லையற்ற இன்பம் உற்றிருந்த அவரின் அடியவர்களை துன்பம் ஒன்று நோக்கி இருந்தது. அருள் சக்கரத்தைத் தாங்கிய திருமகன் இயேசு நாற்பது நாட்களாகத் தம்மவருடன் இருந்தார். நீதி ஒழுக்க நெறிகளை விளக்கினுர். அதன்பின், கதிரவன் வலம் வரும் வானத்தின்மேல் எழுந்து விண்ணகம் செல்லும் கருத்தினைக்கொண்டார்.

தன் வளர்ப்புத் தந்தை வளனையும் தம்முடன் அழைத்துச்செல்ல விரும்பினுர். இயேசுவும் வளனும் மரியன்னையிடம் சென்றனர். ''மதியெழுந்த பதத்தின''ளை வாழ்த்தினர்; வணங்கினர். தமது நோக்கை எடுத்து இயம்பினர். 'செல்வம் கொழிக்கும் பொன்னுலகாகிய விண்ணுலகடைய விருப்பம் கொண்டுள்ளோம்' என்றனர்.

கடந்த நாற்பது நாட்களாக மகனையும் கணவனையும் அடிக்கடி சந்தித்தவள் மரியாள். அவர்களைக் கண்டு கருத்துப் பரிமாறி, அவர்களுடன் சேர்ந்து உண்டு உறவாடிய தாய்க்கு இச்சொற்கள் புண்ணைத் துளைக்கும் கூரிய வேலைப்போலாயின. பாட்டையும் வெல்லும் சொல்லுடைய பாவையவள் திகைத்தாள்; திடுக்குற்ருள்; திருந்தாத வார்த்தைகளைத் திருவாய் மலர்ந்தாள். ''நீவிர் இருவரும் மின்னலைப்போன்று கண்களைக் குடையக்கூடிய ஒளியைக் காட்டினீர். இப்பொழுது பிரிந்து போகிறீர். இது இடி விழுவதைப் போலல்லவா உள்ளது'' என்று ஏக்கத்துடன் மொழிந்து இருவரையும் வணங்கி நின்ருள். அவள் முன்னே நிற்பது கரம்பிடித்த கணவனும் பெற்றெடுத்தபிள்ளையும் என்ருலும், கணவன் புகழால் உயர்ந்த தந்தையாச்சே! பிள்ளையோ ''விதி எழுந்த மெய்வேத நல்நாத''னுச்சே! வேறு என் சொல்வாள் அவள்! பாவம்!

கணவனும் மகனும் மரிக்கு ஆறுதல் சொல்லினர்; ஆசி கூறினர்; ஆணை இட்டனர்: ''கதிரவன் நீங்கியபின் இருளை அகற்றுவதற்கு நிலவு உண்டு. அதே போல் நாம் இவ்வுலகை விட்டுப் பிரிந்தபின், உலகத்தவர்க்குத் துன்பம் நேருமாயின், நீதான் இங்கிருந்து யாவரையும் காப்பாற்றவேண்டும்.''

அதன்பின் அவளிடமிருந்து விடைபெற்றுப் பிரியும் இடம் நோக்கிவிரைந்தனர் இயேசுவும் வளனும். இணையற்றஇறைக்காட்சியைப் பெற்று இன்ப வெள்ளத்தில் மூழ்கிய தூயவரும் விண்ணக ஒளியில் மூழ்கிய வானவரும் அவர்கள் முன்னே சென்றனர்; ஆறுதலும் அமைதியும் ஆண்டவனில் பெற்ற அன்புச் சீடர்கள் அவர்கள் பின்னே சென்றனர். அனைவரும் வானவெளியை தொட்டு நின்ற மணம் கமழும் பொருட்கள் மலிந்த மலையை அடைந்தனர்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# புனித ஜோண் பப்ரிஸ்டிலாசால்

''பலரை நல்வழியில் திருப்பியவர்கள் வானத்தின் ஒளியைப் போலும். விண்மீன்களைப் போலும் என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் பட்டொளி வீசுவார்கள்'' (தானி 12: 3)

மலருக்கோ ஒரு மணம்! தென றலுக்கோ ஒரு மென்மை! ஓசையிலோ ஒரு நாதம்! மாற்றத்திலோ ஒரு மாட்சி! கல்வியிலோ பெருமலர்ச்சி! சுவையிலா பெருமாண்பு! கல்வி வழியிலே கடவுளைக் கண்டவா, வாடிய இளம் பயிர்களுக்கு வான் மழையாக நிறைந்தவர் அவர்தான் டிலாசால் சகோதரர்சபை நிறுவுனர் புனித டிலாசால்.

**தோற்றம்:**

செயலிழந்த சமுதாயத்திற்குச் செயல் உருவூட்டி கல்வி உலகிலே புரட்சியைப் படைக்க 1651-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ந் திகதி புனித டிலாசால் பிரான்ஸ் தேசத்தில் உள்ள றீம்ஸ் நகரிலே லூயி டிலாசாலுக்கும், நிக்கலோடி மோயிட்டி புரூயிலட்டுக்கும் மூத்த புதல்வனகப் பிறந்தார். பிறந்த அன்றே அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

**வளர்ச்சி:**

பக்தியுள்ள, செல்வாக்குள்ள, பணக்காரக் குடும்பத்திலே பிறந்த டிலாசால் சிறு வயதிலேயே பீடப்பணியாளர் சபையிலே சேர்ந்தார். அவ்வேளை அவருக்குத் தானும் ஒரு குருவாக வரவேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதன்படி 8 வயதிலே கல்லூரியிலே சேர்க்கப்பட்டார். பின் றீம்ஸ் பேராலயத்தின் அதிகாரியாக நியமிக்கப்பட்டு பின் புனித சல்பிஸ் குருமடத்தில் சேர்ந்து 9 மாதங்கள் பயிற்றப்பட்டார். அவ்வேளை அவரது தாயார் இறந்துவிட்டார் என்ற செய்தி அவரை வந்தடைந்தது. ஆனல், அக்காலத்திலே புகையிரதமோ, மோட்டார் வண்டிகளோ இல்லாதபடியால் அவர் தனது தாயாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள முடியவில்லை. ஆனல் தனது தாயாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் சிறப்பாக மன்றாடினர் இதன் பின் இன்னொரு சம்பவம் அவரை மிகவும் பாதித்தது

தாயார் இறந்து 9 மாதங்களின் பின் அவரது தந்தையாரும் இறந்து விட்டார். இவர் குடும்பத்தின் மூத்த பிள்ளையானபடியால் குடும்பத்தையும், தமது சொத்துக்களையும் கண்காணிக்கும் பொறுப்பு இவர்மேல் வந்தது. இதனல் இவரது உறவினர்கள் அவரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினர். ஆனல், அவர் தமது சிறுவயதிலே கேட்ட அழைத்தலின் ஒலியை ஞாபகப்படுத்திக் கொண்டு தமது ஆன்ம குருவிடமும், குருமடத் தலைவரிடமும் ஆலோசனைகளையும், புத்திமதிகளையும் கேட்டு மன்றாடிப் பின் சிறிதுகாலம் குடும்பத்தாருடன் சென்று அவர்களைக் கண்காணித்து வந்தார்.

வீட்டில் இருக்கும் போதே அவர் தனது குருத்துவ வாழ்வுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். சிறிது காலத்தின்பின் அவர் தமது ''டிக்கன்'' பட்டத்தைப் பெற்றுக்கொண்டு தமது சகோதரர்களின் படிப்பைக் கண்காணித்துக் கொண்டு தமது தத்துவ சாஸ்திரப்படிப்பையும் தொடர்ந்து கொண்டிருந்த போது 1678-ம் ஆண்டு றீம்ஸ் நகரின் அதிமேற்றிராணியார் அவருக்கு குருத்துவம் என்ற திருவருட்சாதனத்தை வழங்கினர் அடுத்த நாளாகிய உயிர்த்த ஞாயிறு அன்று அவர் தமது முதற்திருப்பலியை ஒப்புக்கொடுத்தார் பின் றீம்ஸ் நகரில் உள்ள புனித பீற்றர் தேவாலயத்தில் பங்குக் குருவாக சேர்ந்து உதவிப் பங்குத் தந்தையாகப் பணி புரிந்தார்.

இவ்வாறு பணிபுரிந்துவரும் வேளையில் அந்நகர மக்களுள் சிலர் ஏழை, எளியவர்களாக இருந்தார்கள். அவர்களிடத்தில் கல்வியறிவு இல்லை. பணம் படைத்தவர்களிடம் மட்டுமே கல்விச் செல்வம் இருந்தது. இதனைக்கண்ணுற்ற டிலாசால் ஏழைப்பிள்ளைகளை ஒன்று சேர்த்து அவர்களுக்கு கல்விச் செல்வத்தை அளிக்க முன்வந்தார். இவரின் இந்தப்பணிக்கு ஏழைப் பிள்ளைகள் வரத் தொடங்கினர். இதனல் அவர்களை இவர் ஒருவர் மட்டும் சமாளிக்கமுடியாமல் போகவே ஆசிரியர்களின் உதவியை நாடினர். அவ்வாறு கல்வி புகட்ட வந்த ஆசிரியர்களிடத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு காணப்படவில்லை. மாருக அவர்களிடத்தில் சுயநலமே மேலாக குடிகொண்டிருந்தது. அவ்வாசிரியர்கள் ஆசிரியப்பணி ஒரு அர்ப்பணிக்கும் பணி என்பதை உணர்ந்திருக்கவில்லை எனவே அர்ப்பணித்த ஆசிரியர்களுக்கென ஒரு சபையை உருவாக்கப் போராடினர்.

அநீதிக்கு போர்க் கொடி உயர்த்துவது மட்டும்போராட்டம் அல்ல. கல்லூரிவடிவிலே அறிவு உயிரூட்டம் கொடுத்தது தான் இவரது போராட்டம். புரட்சி வெடித்தது, மாற்றம் பலகண்டது பிரான்ஸ் தோட்டம். அரசியல் மறுமலர்ச்சி அல்ல, ஆனல் சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இவ்விழிப்புணர்ச்சி 1680 இல் டிலாசால் சபையாக மலர்ந்தது இவரின் பிறகுவந்தவர்கள் குருக்கள் ஆகாமல் சதோதரர்களாகவே இருக்கின்றனர்கள்.

**சபையின் நோக்கம்:-**

மனிதனை மதிக்கக் கூடிய, உயிர்களை ஒருமைப்படுத்தக் கூடிய எந்தக் கல்வியும் இறைவனின் கொடையை எதிர் நோக்க ஒரு வழியாகும். அதோடு இறை விசுவாசத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய வழியும் அதுவே என்ற மையக் கருத்தை மறுவின்றி உணர்ந்த டிலாசால் மனிதனையும் [illegible] தனையுப், இறைவனையும்—மனிதனையும், இணைக்கும் பாலமாக பண்பாட்டுக் கருவியாகக் கல்லூரிகளை ஆரம்பித்தார் நற்செய்தியின் மதிப்பீடுகளைப் பாராட்டவும் அறியாமையை அகற்றவும், சிறந்த முறையில் செயற்படுத்தவும் சிறுவர்களின் அகவுணர்ச்சியைத் தூண்டவும் போதனை மட்டுமல்ல நன்னடத்தையும்தேவை என்பதை உணர்ந்து கிறிஸ்தவ கல்லூரிகளை ஒரு நிரந்தரப் பயிற்சித் தளமாக சகோதரர்களுக்கு அமைத்தளித்தார்.

அதன்படி இன்று எத்தனையோ மாணவர் விடுதிச் சாலைகள், மாணவர் பராமரிப்பு இல்லங்கள் இளைஞர் நகரங்கள், ஆசிரியக் கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள் சிறைக்கைதிகளுக்கான பாடசாலைகள், தொழில் நுட்பக்கல்லூரிகள், சகோதரப் பயிற்சித் தளங்கள், என்பனவற்றின் மூலமாக இளைஞர்களை யுவதிகளை, சிறுவர் சிறுமியர்களை நல்வழிப்படுத்த முயற்சி எடுத்துவருகின்றனர்.



**அணையா விளக்கு:-**

இறைத்திருவுளமே தன் திருவுளம் என்று அசையா நம்பிக்கையில் வாழ்ந்து கல்விவழியில் தன்னல் இயன்ற இறைப்பணியாற்றிய புனித டிலாசால் 1719-ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 7-ம் நாள் இறைபதம் எய்திவிண்ணக வாழ்விற்கு காலடிவைத்தார். அவர் இறக்கும் போது 27 மடங்களையும் 274 சகோதரர்களையும் 900 மாணவர்களையும் விட்டுச் சென்றர். இப்போது அவர் கிறிஸ்தவ ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பாதுகாவலராக அணையா ஒளி விளக்காக ஒளி வீசுகின்றர்.

**ஒளிச் சுடர்கள்:-**

இவர் தொடங்கிய பணியை இன்று 11,000க்கு மேற்பட்ட சகோதரர்கள் 1250 மடங்களில், 89 நாடுகளில் பணியாற்றி வருகின்றர்கள். இலங்கையிலும் கூட இன்று 110க்கு மேற்பட்ட சகோதரர்கள் பணியாற்றுகின்றர்கள்.

இப்பணி சிறக்க நல்லுள்ளம் படைத்த வீர இளைஞர்களாகிய நீக்கள் இறையழைத்தலில் உங்களை ஈடுபடுத்தச் செய்யுங்கள்.

R. ஜோசப் ஜெயகாந்தன்
130, டிலாசால் வீதி
[illegible]

# வணக்கத்தின் வைகாசியும் செபமாலையும்

வைகாசித் திங்கள் பிறந்து விட்டால் அனைவரது உள்ளங்களிலும், இல்லங்களிலும் அன்னை மரியாளின் நினைவுகள் உதயமாகின்றன. அன்னைக்கென அர்ப்பணிக்கப்பட்ட மாதங்களில் ஒன்றான வைகாசி சிறப்பானதாகவும், முக்கியமானதாகவும் அமைகின்றது. இந்த மாதத்தில் விசேஷ முறையில் அன்னையைப் போற்றி, வாழ்த்தி, வணங்கவும் செபமாலைப்பக்தி முயற்சி மற்றும் வணக்கமாத வழிபாடுகளில் ஈடுபடவும் தாய்த்திருச் சபை எம்மை அழைக்கின்றது.

வையத்துள் வாழுகின்ற அனைவராலும் மறக்கமுடியாத இம்மாதத்தில் செபமாலைப் பக்தி சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. மரியன்னையின் புகழையும், அவளது பக்தியையும் பறைசாற்றும் வைகாசி மாதத்தில் வண்ண மலர்களாலே அன்னையை அலங்கரித்து, அகமகிழ்ந்து, பூக்களைச் சாற்றி. பாக்கள் பாடுவதும் உண்டு. வைகாசி மாதத்தில் கன்னிமரியாளுக்கு அவளது பிள்ளைகளாகிய நாம் எந்த வகையில் எதைச் செய்யலாம் என்று சிந்திக்கின்ற அதே வேளையில் மீட்பரின் அன்னையாம் தாய்மரி எதை நம்மிடம் இருந்து எதிர்பார்க்கின்றள் என்பது பற்றியும் சிந்திக்க, தியானிக்க வேண்டும் திருச்சபையின் தாய்மரியாள் எம்மிடமிருந்து இருவகையான பக்தி முயற்சிகளை ஆசிக்கின்றள். செபம், தபம் என்ற முயற்சிகளை கேட்கின்ற அன்னையானவள் இரண்டிலும் செபமாலைப் பக்தியை கூடுதலாக விரும்புகின்றள். தான் தனது தரிசனங்களில் கற்றுக் கொடுத்தவாறு 'செபமாலையை செபியுங்கள்' என்று வேண்டுகின்றள். அத்தோடு செபமாலையை இடைவிடாது செபித்து. குடும்பங்களிலும் நாட்டிலும் சமாதானம் நிலவ வேண்டுமென்பதே அன்னையின் பேராவல்.

ஆலயத்தில் மட்டுமல்ல ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பத்திலும் செபமாலைப் பக்தி முயற்சி இடம்பெறவேண்டும். ஆனல் இன்று செபமாலைப் பக்தியில் ஈடுபடுகின்ற குடும்பங்கள் மிகக் குறைவு. குடும்பங்களில் சொல்லப்படுகின்ற செபமாலை மூலமான வேண்டுதலினலேயே எங்கெங்கெல்லாம் போரும், பூசலும், சண்டையும் சச்சரவும் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அமைதியையும், சமாதானத்தையும், சந்தோசத்தையும் உருவாக்க முடியும் குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் செபமாலையை செபித்து நாட்டில் நிரந்தர அமைதியும் மக்களிடையே ஒற்றுமையும் பிறக்கச்செய்வது எம்மனைவரினதும் கடமையாகும்.

அம்மா என்று அழைத்தால் குழந்தாய் என்று வருகின்ற மரியாளுக்கும் எமக்கும் பாலமாக அமைவது செபமாலை. எம் அனைவரையும் அணைக்கின்ற அன்புக்கரமாகியதாய் மரி மக்களை சகல போர் அழிவுகளிலிருந்தும் இயற்கையின் கெடுபிடிகளிலிருந்தும் காப்பாற்ற கருவியாக இருப்பதும் இந்த செபமாலைதான், எமது தாழ்வு நிலை நீங்கி, அனைவரும் துயராழி தாண்டி, கரையேற அருளைப் பொழிகின்ற மரியன்னைக்கு நாம் ஆற்றுகின்ற விருப்பமான பிரியமான பக்தி முயற்சியும் இந்தச் செபமாலைதான்.

எனவே எம்மிடம் காணப்படுகின்ற விசுவாசக்குறைவினலும், அக்கறையின்மையினலும் புறக்கணிக்கப்படுகின்ற செபமாலைப் பக்தி, வணக்கத்தின் மாதத்தில் ஊக்குவிக்கப் படவேண்டும். இறையேசுவிடமும், அவரது தாயான மரியாளிடமும் எம்மை ஒன்று சேர்க்கின்ற ஊடகமான செபமாலையின் நாதம் அனைவரினதும் மனதிலிருந்து எழுந்து ஒலித்து உலகமெல்லாம் பரவவேண்டும். அன்னை ஏற்றுக் கொண்ட பணியின் சிறப்பைக் கண்டடையவும் அவளது ஆசி இடைவிடாமல் எல்லாக் காலத்திலும், எல்லா இடத்திலும், எல்லா மக்களுக்கும் கிடைக்கவும் செபமாலை மூலம் வேண்டுவோம். எங்கு அவளது பாதுகாப்பும், அன்னைக்குரிய பாசமும், பரிவும் அதிகமதிகமாக தேவைப்படுகின்றதோ அங்கு நிச்சயமாக அன்னை எங்களோடு இருக்கின்றள் என்ற உண்மையை ஏற்றுக் கொள்வோம். உலக மாந்தரிடையே தாயின் பாசம் அதிகரித்து மெய்யாகவே ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்விலும் அருளைப்பொழிந்து தொடர்ந்தும் திருமகனின் ஆசியைப் பெற்றுத்தர இறைஞ்சுவோம். ஆகவே எங்கள் குடும்பங்களிலே, பங்கிலே சமுதாயத்திலே செபமாலைப் பக்தியைவளர்ப்போம். செபமாலையின் சிறப்பையும் அதனை இடைவிடாது செபிப்பதன் நோக்கத்தையும் எடுத்துக் கூறி குறித்த காலத்திற்கு மட்டுமல்ல என்றும் செபமாலைப் பக்தி வளர, தொடர உழைப்போம். அன்னையின் ஆசிக்கு செவி கொடுக்கின்ற நாங்கள் 'தினமும் செபமாலை' என்ற வாக்கை உலகெங்கும் பரப்பி செபமாலையின் நாதமும், அன்னை மரியின் புகழும் பரவச் செய்வோம் மரியின் மகிமையைப் பறைசாற்றுவோம்.

தொகுப்பு:-
மோசேஸ் தேவரத்தினம்
தும்பளை, பருத்தித்துறை

## அரிப்புத் துறையில் மேதின் விழா

முத்தொளி வீசும் முத்தரிப்புத் துறையில் புனித சூசையப்பர் கழகத்தின் 26ஆவது வருடாந்த மேதின விழா மே மாதம் 1-த் திகதி அலைகடல் அருகில் அமைக்கப்படும் அழகுறு பலிப்பீடத்தில் அருள் தந்தை T. நவரட்ணம் அடிகளாரின் திருப்பலியுடன்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறைக் கலாமன்ற கருத்தரங்கு
# "தமிழர் பண்பாடும் திருமறையும்"

கலைநிலா: தொகுப்பு — செல்வி விமலாம்பிகை

கலைகளின் வளர்ச்சியினூடே திருமறையின் வளர்ச்சியை முனைப்புடன் மேற்கொள்ள முடியும் என்ற நோக்குடன் இயங்கிவரும் திருமறைக்கலாமன்றத்தினரால் "தமிழர்பண்பாடும் திருமறையும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கம் ஒன்று 21-4-1988 வியாழக்கிழமையன்று நடாத்தப்பட்டது. யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆயர். மேதகு கலாநிதி. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இக்கருத்தரங்கத்தில் பல்துறைப்பட்ட அறிஞர்களும் கலைஞர்களும் பங்குகொண்டு சிந்தைக்கும் செவிக்கும் சிறப்பான விருந்தளித்தனர். தமிழர்பண்பாடும் திருமறையும் பற்றி அறிய ஆவல்கொண்ட சமூகத்தின் பல்வேறு பகுதியில் உள்ளவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

காலை 8-45 மணிக்கு ஆயர். மேதகு. கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். இசையின் பின்னணியில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சி அச்சூழலுக்குப் புதுமெருகு தருவதாய் அமைந்தது. அதனைத் தொடர்ந்து இறைவணக்கத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

திருமறைக்கலாமன்றத்தின் செயலாளர் திரு V. J. கொன்ஸ்ரன்ரைன் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது அன்னிய ஊடுருவல்களின் மூல கலாச்சாரபாதிப்பு நிகழ்ந்துவரும் இன்றைய காலகட்டத்தில் இக்கருத்தரங்கின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அடுத்து திருமறைக் கலாமன்ற இசைக் குழுவினரின் கூட்டுவழிபாடு இடம்பெற்றது. இசையோடு கூடிவந்து இதயத்தை நிறைக்கவல்ல மூன்று இறைவணக்கப் பாடல்கள் இவ்வழிபாட்டில் இசைக்கப்பட்டன.

தொடர்ந்து மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் தலைமையுரையாற்றினார். கலாச்சாரத்தோடு திருமறை எவ்வாறு இணைந்துள்ளது என்பதை விளக்குவதாக ஆயர் அவர்களின் தலைமையுரை அமைந்திருந்தது பண்பாடு என்பதை வரையறுத்து, எல்லோருடைய பண்பாடுகளையும் அறிந்து அந்தந்த மக்களது பண்பாட்டிற்கு ஒத்திசைவாகவே நற்செய்தி போதிக்கப்பட்டு வருகின்றது என்பதைக்குறிப்பிட்டுக்காட்டினார்.

அதனைத்தொடர்ந்து ஆய்வரங்கம் இடம்பெற்றது. ஆய்வரங்கில் தமிழர் பண்பாடு பற்றி பேராசிரியர் கலாநிதி. C பத்மநாதன், பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ், கலாநிதி. நா. சுப்பிரமணியம் ஆகியோர் ஆய்வுகளை மேற்கொண்டனர் தமிழர் பண்பாட்டை வரலாற்று நோக்கில் ஆய்வு செய்த பேராசிரியர் கலாநிதி. C. பத்மநாதன் அவர்கள் தமிழர்பண்பாடு ஒன்று உள்ளதா? என்ற ஐயத்தைகிளப்பி, வரலாற்று நோக்கில் படிப்படியாக தமிழர் பண்பாட்டின் வளர்ச்சியை எடுத்தியம்பினர். கிறிஸ்தவ மதத்தினரும் இந்துமதத்தினரும் மதரீதியாக வேறுபட்டு நின்ற போதிலும் தமிழர் என்ற மனப்பாங்குடன் புரிந்துணர்வு ஒற்றுமையின் அடிப்படையில் எதிர்காலத்திலும் ஒருமித்துச் செயற்பட வேண்டும் என்றார்.

தமிழர் பண்பாட்டில் மொழியும் நடைமுறைகளும் பற்றி ஆய்வுரையாற்றிய கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் பண்பாடு என்பதனுள் அடங்கும் ஒரு விடயமே நடைமுறை என்பதைக் குறிப்பிட்டு, தமிழ் மொழியின் நடைமுறைகள், உறவுப்பெயர்கள், நிறங்கள், மரபுத்தொடர்கள் மூலமும், பண்பாட்டு நடைமுறைகள் பிறப்புமுதல் இறப்பு வரை இடம் பெறும் சடங்குகள் சம்பிரதாயங்கள், கொண்டாட்டங்கள். பிதிர்வணக்கங்கள், கலைகள் என்பவற்றின் மூலமும் பிரதிபலிக்கப்படுவதைத் தெளிவுபடுத்தினர்.

தமிழர்பண்பாட்டில் இலக்கியமும் நடைமுறையும் என்ற பொருள்பற்றி ஆய்வுரையாற்றிய கலாநிதி நா. சுப்பிரமணியம் அவர்கள் சங்க இலக்கியங்கள் பக்தி இலக்கியங்கள் மூலம் தமிழர் பாட்டுநடைமுறைகளை வெளிக்கொணர்ந்தார். இறைவழிபாட்டு நடைமுறைகள் பற்றி அவர் முக்கியத்துவம் கொடுத்து விளக்கினர்

ஆய்வரங்கத்தைத் தொடர்ந்து, இசைத்தென்றல் M. J தாஸ் குழுவினரால் "காலங்களில இசை' என்ற இன்னிசை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது திரு S. ஜெயசிங்கம் அவர்களின் முன்னுரையுடன் ஐந்து வகையான ராகங்களில் கிறிஸ்தவ பாடல்களுக்கான இசையமைப்புகள் இசைக்கப்பட்டன.

தொடர்ந்து, அடுத்துள்ள மண்டபத்தில் கண்ணுக்கும் கருத்திற்கும் ஒருங்கே விருந்தளிக்கும் காட்சியரங்கம் இடம்பெற்றது செபமாலைத்தாசர் (யாழ். அருள் ஆச்சிரமம்), ஓவியர் மாற்கு. அருள் திரு. R. யோசப் அடிகளார் ஆகியோரின் உதவியுடன் திரு. மு புஸ்பராஜன். திரு. J B மோகன்ராஜ் ஆகியோரால் காட்சியரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. ஓவியர் மாற்கு அவர்களின் மாணவர்களது மதபண்பாட்டோடு இணைந்த ஓவியங்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன,

அதனை அடுத்து 11-40 மணிக்கு கேள்வி அரங்கம் இடம் பெற்றது. அருள்திரு. கலாநிதி R. யோசப் அடிகளார் அவர்களை நடுவராகக் கொண்ட இக்கேள்வியரங்கில் புலவர் A. W. அரி[illegible], திரு. E. ஜெயராஜ் [illegible] இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர்), திரு மா. வேதநாதன், திரு S சிவலிங்கராஜா M. A. பேராசிரியர் கலாநிதி. C பத்மநாதன். பேராசிரியர் கலாநிதி அ சண்முகதாஸ், கலாநிதி நா சுப்பிரமணியம், மகேஸ்வரன் B A. ஆகியோர் பங்கு கொண்டனர் தமிழர் பண்பாட்டின் பல்வேறு அம்சங்கள்பற்றியும் வினாக்கள் தொடுக்கப்பட்டு விடைகள் அளிக்கப்பட்டன திருமறையோடு தமிழர் பண்பாடு இயல்பாகவே பின்னிப் பிணைந்து வட்ட நிகழ்வுகள் அங்கு சுட்டிக்காட்டப்பட்டன.

மாலை நிகழ்ச்சிகள் மீண்டும் 2-30 மணியளவில் செபத்துடன் ஆரம்பமாகின. நிகழ்ச்சி நிரலில் இல்லாத அம்சமாக கேள்வி நேரம் தொடர்ந்து இடம் பெற்றது. திருமறைக கலாமன்ற இயக்குனர் நீ. ம. சவரிமுத்து அடிகளார் அவர்கள் கேள்விகளுக்குப் பதிலளித்தார், தமிழர் பண்பாடுபற்றிய கேள்விகளுக்குமட்டுமன்றி திருமறைக்கலாமன்றத்தின் நடவடிக்கைகள் பற்றிய வினுக்களுக்கும் அங்கு விடைகள் இறுக்கப்பட்டன.

தொடர்ந்து 3 மணியளவில் விவாத அரங்கு இடம்பெற்றது. சமயமும் பண்பாடும் என்ற தலைப்பில் இருவேறுபட்ட விளக்கங்கள் கவிஞர் விக்ரர் (யாழ். ஜெயம்) அவர்களது தலைமையில் எடுத்துரைக்கப்பட்டன சமயமும் பண்பாடும் வேறுபட்டன அல்ல ஆனல் சமயத்தின் கூறுகள் வேறு, பண்பாட்டின் கூறுகள் வேறு என்ற அடிப்படையில் பேராசிரியர் அருள் திரு. அ. சந்திரகாந்தன் அடிகள் அவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தார் இவர் தமது கருத்துக்களை சமூகவியல் ரீதியிலும் வரலாற்றியல் ரீதியிலும உதாரணங்கள் மூலம் விளக்கினர். சமயமும் பண்பாடும் ஒன்றிற்கொன்று பின்னிப் பிணைந்துள்ளன. இரு கூறுகளையும் வேறுபடுத்திவிட

(தொடர்ச்சி 8 ஆம் பக்கம்)

தேம்பாவணியில்

# காவியத்தலைவி

வான்மகள், மீன்மகள், கோன்மகள், தேன்மகள், என்றெல்லாம் வீரமாமுனிவரால் போற்றப்படுபவள் தேம்பாவணியின் காவியத்தலைவி மரியாள்.

பைபிளிலே சில இடங்களிலே மட்டும்வந்து போகும் மரியாள் தேம்பாவணியின் காவியத்தலைவனும் சூசை முனிவரின் துணைவியாகத் தோற்றுவதால் அதிலும் சூசையே போற்றும் தெய்வீகத் தலைவியாக வர்ணிக்கப்படுவதால் அவளது குணநலவியல்புகள் பற்றி வளன் (சூசை) வாயினூலும், இறைவன் வாயினுலும். வானவர் மூலமும், மனிதர்கள் மூலமும் பாடப்படும் மரியாள் புகழானது தேம்பாவணியைப் படிக்கும்போது மெய்சிலிர்க்கச் செய்கின்றது.

யத்தில் செபித்துக்கொண்டிருப்பவளாகவே படிப்பவர்களுக்கு அறிமுகம் செய்யப்படுகின்ருள். அவள் வருகையை கட்டியம் கூறி அறிவிப்பது போன்று, அவள் காட்சியில் தோற்றுமுன்னர், வளன் வாயால் அந்தத் தேவ கன்னிகைபற்றி முன்மொழிகின்ருன்.

"உலகின் தீமைகளை ஒழிப்பதற்காக இறைவா நீ பிறக்க வேண்டும்" என்று தனது வீட்டில் இருந்து செபிதது்க் கொண்டிருக்கும வளன்.

கன்னித்தாய் கரத்து உன்னைக் கண்டு உள்உவப்ப உன் மலர்த்தாள் சென்னித்தார் என்று அணிந்து இலங்க...

(திரு: 22)

இப்படியாக காவியத்தலைவன் வளன் வாயாலேயே 'கன்னித்தாய்' பற்றிக் கூறிய பின்னர். அடுத்த பாடலிலே மரியாள் அறிமுகம் செய்யப்படுகின்ருள். அவளும் வளனைப் போன்று, அதாவது வளன் இறைவன் வரவுக்காக வேண்டி அழுது நிற்பதுபோன்று மரியாளும் "அன்ன உரைக்கு இசைவாய்" பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக இறை வருகைக்காக எருசலேம் தேவாலயத்தில் வேண்டுதல் செய்வதாக முனிவர் கூறுகின்ருர்.

தேவதாயன் வணக்கமாதத்தை முன்னிட்டு மேமாதம் முழுவதும் 'காவியத்தலைவி" என்ற தொடர் கட்டுரை வெளியாகும். — நாவண்ணன

தெய்வீகத் தலைவி

திருமணப் படலத்தில் மரியாள அறிமுகம் செய்து வைக்கப்படும் இடத்தில் இருந்து அவளஒரு தெய்வீகக் கன்னிகையாகவும், மாதர்குல மாணிக்கமாகவும் படம்பிடித்துக் காண்பிக்கப்படுகின்ருள். அப்படி நோக்கும் கால் தேம்பாவணிக்காவியத்தில் அவள் ஒரு தெய்வீகத்தலைவி மற்றது ஒரு சிறந்த குடும்பத்தலைவ். இவ்விரண்டு சிறப்புகளும் ஒருங்கமைந்த காவியத்தலைவி. அந்தக் காவியத்தலைவியின் தெய்வீகத்தன்மைகளை மாட்சிமைப வீரமாமுனிவரின் பார்வையில் காணுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

மரியாள் அறிமுகம்

தேமபாவணியில் மரியாள் முதன முதல்ல் தோன்றும் காட்சி வான் சிறப்புமிக்கவள், பேரழகியான அவளை ஏதோ இயற்கைச் சூழல் மிகுந்த சோலையிலோ அல்ல தேவாலயத்தில் செபித்துக் கொண்டிருக்கும் அவளை அதிக வார்த்தைகளால் அலங்கரித்து அறிமுகம் செய்யாது.

"உன்னப் பொருவற்ற தரும கன்னிமா என்பாள்" (திரு. 23) என்கின்ற ஒரே வரியில் எண்ணிப் பார்க்கவும் முடியாத அளவுக்கு புண்ணியங்களால் நிறைந்தவள் என்கின்ருன்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

# நானும் ஒரு தொழிலாளி

ஆதியிலே இன்பவனத்திலே தெய்வச்சாயலாக படைக்கப்பட்ட நம் முதல் பெற்றோர் தம் சுய துர்ப்பலத்தால் கடவுளின் கட்டளையை மீறி வீழ்ச்சியடைந்தனர். கடவுள் பாவத்தினை தபமை விட்டுப் பிரிந்த அவர்களுக்குசில தண்டனைகளை பாரிய பொறுப்புக்களாக சுமத்துகிருர். இவ்வாறு ஆதாமிடம் நீ உழைத்துத்தான் உன் வாழ்நாளெல்லாம் பூமியின் பலனை உண்பாய்' எனப் பணிக்கப்பட்டது. பின் ஆதாமை அவன் எந்த மண்ணினின்று எடுக்கப்பட்டானே அந்த மண்ணையே பண்படுத்தும்படி அனுப்பினர்.

அன்று கடவுளால் விதிக்கப்பட்ட அந்த உழைப்பின் கட்டளைக்கு எவனெருவனும் விதிவிலக்காக இருந்ததில்லை; இருக்கவும் முடியாது. [illegible] உழைப்பு [illegible]க்கும் ஒவ்வொரு உயிர்களுக்கும் அவசியமாகின்றது. 'படைத்தார் படைப்பெல்லாம் மனுவுக்காக என்பதுபோல மனிதனுக்காக படைக்கப்பட்ட படைப்புகளை உழைப்பின் மூலம் மனிதன் மிக உன்னத நிலை அடையச்செய்கிருன். அத்துடன் படைக்கும் பணியில் மனிதனை ஒன்றிணைத்து ஆண்டாண்டு காலம் அவனை மகிழ்வுடனும், அமைதியுடனும் அவனியில் பரிமளிக்கச் செய்வது உழைப்பு என்ருல் அதை எவரும் மறுப்பதிற்கில்லை.

திருமணம் என்னும் திருவருட்சாதனம் காணுவூரில் நடந்த திருமண வீட்டில் மிக உன்னத நிலை பெற்றது யாமறிந்ததே. அவ்வாறே நசரேத்தூரில் புனித சூசையப்பரினுல் உழைப்பின் மகத்துவம் நன்கு உணர்த்தப்பட்டுள்ளது. புனித சூசையப்பர் தம் சொந்த கரங்களினுல் உழைத்து மரியாளையும், யேசுவையும் காப்பாற்றி, உழைப்புக்கு மேல் வரிச்சட்டமாக திகழுகின்றார். அதனுலேயே அவர் இன்று தொழிலாளரின் பாதுகாவலராகப் போற்றப்படுகின்ருர்.

உழைப்பு என்றதும் நம்மில் பலர் பொருள் சம்பாதிப்பதையே எண்ணுகின்றனர். ஆனுல் அது உண்மையில் படைப்பின் மீது ஒரு ஆளுமையை, முத்திரையை பதிக்கிறது. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் உழைப்பையே கடவுள் விரும்புகிருர். 'பாடுபட்டவனே பட்டத்துக்குரியவன்' என்பதுபோல கஷ்டப்பட்டு சம்பாதிப்பவனே 'தொழிலாளி' என்ற உயர் அந்தஸ்தைப் பெறுகின்ருன் தொண்டரென்ருேர்

வகுப்பில்லை
தொழில் சோம்பலைப்போல்
இழிவில்லை"
—பாரதி—

மே. யஸ்ரின் சௌகான்
சில்லாலை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இளைஞர்களில் குற்ற உணர்வும், கவலையும்

"போனால் போகட்டும் போடா" என்ற என்ற மன நிலையில் இன்று பலர் வாழா மல். நடந்தேறிய காரியத்தை நினைத்து நினைத்து மனம் வெதும்பி மனநோயாளர் களாக மாறுபவர்கள் தான் எமது சமுதாயத்தில் அதிக மாகக் காணப்படுகிறார்கள. நேற்று நடந்துமுடிந்த ஒரு நிகழ்ச்சயை நினைத்து மன வருத்தபட்டுவதால் இன்றைய நல்ல நாளை நம்மால் சரிவர, மகிழ்ச்சி மிக்கதாக வாழமுடி யாது போய்விடுகிறது. பழைய தோல்விகளை எண்ணுமல் வெற் றிகளை எண்ணுங்கள் வாழ்ந்து கெட்ட பாதையை திரும்பிப் பாரக்காதீர்கள். இனி வாழப் போகும் வாழ்க்கை எப்படி அமைய வேண்டுமென்று சிந்தியுங்கள்.

இன்று எமது சமுதாயத்தில் வாழும் இளைஞர்களில் பெரும் பாலானோர் இருவகையான உணர்வுகளுக்கு அடிமைப்பட் டவர்களாகக் காணப்படு கிறார்கள். குற்ற உணர்வு, கவலை உணர்வு என்பவற்றிற்கு அடிமைப்படாதவர்கள் பெரும் பாலும் இல்லையென்று தான் கூறவேண்டும். இறந்தகாலத் தில் நடந்தேறிய ஒரு சம்பவம் சம்பந்தமான குற்ற உணர்வு அவர்களைத் தொடர்ந்து வரு கிறது அல்லது எதிர்காலத்தில் நடக்கப்போகும் ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாகவும் அக்குற்ற உணர்வு அவர்களை ஆட் கொள்கிறது. பொதுவாக ஒரு தாய், "நீ அந்த பெண்ணை மணந்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன்" என்று பயமுறுத்துகிறாள். தன் தாய் தற்கொலை செய்வதற்கு நான் தான் காரணமாக அமைந்து விடுவேன் என்ற குற்ற உணர் வுக்கு அவன் தள்ளப்படு வதோடு இதனால் அவன் தன் இலட்சியத்தையே கைவிட்டு விட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான்.

பருவமடைந்த பெண்ணை ஆண்களுடன் பழகவேண்டாம் என்று தாய் அறிவுரை கூறு கிறாள். அது நாளடைவில் குற்ற உணர்வுடனே ஆண் வர்க்கத்தையே இளம் பெண் கண்டு அஞ்சத்துவங்கும் அள விற்கு மாறிவிடுகிறது. குற்ற உணர்வு மனித உளவளர்ச்சி யைப்பாதிக்கும் ஒரு கொடிய நோயென்று தான் கூற வேண்டும். குற்ற உணர்வு உள்ளவர்கள் பெரும்பாலும் பகிரங்கமாக கதைக்கப்பயப் படுவார்கள். பலருடனும் சேர்ந்து உறவாட தயங்குவார் கள். குற்றஉணர்வு அவர்களின் தனித்துவத்தை இழக்கச் செய்துவிடும் ஒருவர் கூறிய கருத்தை மற்றவர்கள் அலட் சியம் செய்து சிரித்தார்களா யின் மீண்டும் தன்கருத்தை வெளியிட அவர்தயங்குவார் காரணம் அவரின் குற்ற உணர்வு அவரை அடிமைப் படுத்திவிடும்.

நாம் ஒருவிடயம் பற்றி கவலைப்படுவதால் எதையும் சாதிகது விடமுடியாது சிலர் நடந்தேறிய நிகழ்ச்சியைப் பற்றி தொடர்ந்து கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் வாழ்க்கையில்பிடிப்பற்றவராக வும் மனநோயாளியாகவும் தான் மாற வேண்டியநிலை ஏற் படும். தான் உயிருக்குயிராய் காதலித்த தன் காதலி தன்னை ஏமாற்றிவிட்டதை நினைத்து தினமும் கவலைப்பட் டால் அவள் கிடைத்துவிடு வாளா? இல்லை. நடந்தது நடந்ததுதான். எதையும் ஏற் றுக்கொள்ளும் மனப்பக்குவம் நம்மில் வளரவேண்டும் நமது அன்றாட வாழ்வில் இழப்பு, ஏமாற்றம், நம்பிக்கையின்மை போன்ற விடயங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இவைகளை நினைத்துக்கவலைப் படுவதை விடுத்து ஆக்கபூர்வ மான செயல்களில் எம் எண் ணங்களைச் செலுத்து வோமாகில் நிச்சயமாக நாம் இவ்வுலகிற்கு அதாவது எமது வாழ்விற்கு அர்த்தத்தை கற்பிப்பவர்களாகத் திகழலாம்.

நாம் ஒரு விடயத்தை நோக்கும் விதத்தில் தான் நன்மையும் தீமையுமாகத் தெரிகின்றனவேயொழிய ஒரு விடயம் நிகழும் சம்பவத் திலல்ல.

இன்றைய இளைஞர், யுவதி கள் குறிப்பாக நன்மை தீமைகள் நிகழும் விடயங் களில் இருந்து கண்டுகொள்ள முனைகிறார்கள். ஏதாவது ஒரு விடயம் தமக்குச் சாதகமாக அமைந்து விட்டால் அது நன்மையாகவம், பாதகமாக அமைந்த விடயத்தை தீமை யாகவும் கொள்ளுகிறார்கள். இளைஞர்களாகிய நாம் குற்ற உணர்வு, கவலை, தீமை போன்ற விடயங்களை தன்னம் பிக்கையுடனும், உறுதியுட னும், விசுவாசத்துடனும் நின்று எதிர்கொண்டால் நிச்சயம் வெற்றி நமக்கே.

வெற்றி நோக்கி எண்ணங் களைத் திருப்புங்கள் வெற்றி நோக்கி நடவுங்கள்.

தினன்
யாழ் — பல்கலைக்கழகம்.

---




அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
28-4-1989.

'அன்பு இளம் உள்ளங்களுக்கு'

"எனக்கு இரக்கம் காட்டு பவர், என் அடைக்கலக் கோட்டை அவரே; எனக்குப் பாதுகாப்பும் விடுதலையும் அளிப்பவர் அவரே. என் கேட யமும் புகலிடமும் அவரே"
(சங்கீதம் 143/2)

நிரந்தரமில்லாத, திம்மதி யில்லாத மனித வாழ்க்கை நிறைவுபெறுவது இறைவனின் இரக்கத்தினுல், அவரது பாது காப்புப் பராமரிப்பும் தொடர்ந்து கிடைப்பதால் தான். அழிவுக்குரிய மனித வாழ்க்கை ஆண்டவனின் கரிசனையான செயற்பாட்டினுல் அழியா நிலையை அடைகின் றது. எமது சொந்த பலத்தினுல். தற்பாதுகாப்பு நடவடிக்கை களினுல் எம்மையே நாம் காப்பாற்றிக்கொள்ள முடியாத இயலாமையை அனுபவித்து வருகின்றோம். அவர் எம்மோடு இருக்கின்றார், அவர் எம்மை வாழவைக்கின்றார் என்ற உணர்வே எமக்கு உற்சாகத்தையும் உறுதியான மனப்பக்குவத்தையும் தருவதாய் உள்ளது.

நலமே வாழ நல்வாழ்த்துக்கள்,
அன்பு நெஞ்சன் வி. பி.

---

## வாழ்க்கை உன் கைகளில்

வாழ்க்கையிலே வேதனைகள் உண்டு என்றால்
வருங்காலம் வெற்றியென நினைத்து விடு.
தாழ்வு மனம் தன்னை நீ தகர்த்துவிட்டு
தீரமுடன் புறப்படு வாழ்ந்து காட்ட
உன்கையில் உன் வாழ்க்கை என்றுணர்ந்து
உறுதியுடன் முன்னேற உறுதிகொள்ளு
துன்பங்கள் தொடர்ந்தாலும் நிலைப்பதில்லை
தூக்கங்கள் கலைந்துமே துணிந்துவிடு
எப்படியும் வாழலாம் என்றில்லாமல்
ஏனிந்த வாழ்க்கையென எண்ணிடாது
இப்படித்தான் வாழ்ந்திட வேண்டுமென்று
இப்போதே தீட்டிவிடு திட்டமதை
எத்தனைபேர் வாழ்ந்தார்கள் வையகத்தில்
எல்லோரும் வரலாற்றில் வாழ்கின்றாரா?
உத்தமராய் சத்தியராய் வாழ்ந்தவரே
உள்ளங்களில் வாழுகின்றார் எந்நாளுமே

"தமிழ் நேசன்"
குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

---



### திருமண வாழ்வு
## திருமணம் என்றால் என்ன?
(சென்றவாரத் தொடர்ச்சி)

**பலுகிப் பெருகுங்கள்;-**

இன்று மனித இனம் அழியாமல் பாரெங்கும் பலு கிப்பெருகி வரக்காரணம் ஆணும், பெண்ணும் ஒரு வரை ஒருவர் விரும்பி, ஒரு குடும்பமாக ஒன்றித்து வாழ்வதே ஆதியில் இறைவன் "பலுகிப் பெருகுங் கள்" (ஆதி 1:28) என முதற் குடும்பத்தை ஆசீர்வதித் தார் "திருமணமும் திருமண அன்பும் தம் இயல்பி லேயே பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதையே நோக்க மாகக் கொண்டுள்ளன இதுவே அவற்றின் சிகரமாக வும் அமைகிறது" (2-ம் வத். சங். இன்றைய உலகின் திருச்சபை எண் 48) குடும்ப ஒன்றிப்பின் பயனுகப் பிறக்கும் குழந்தைகள் தம்பதிகளுக்கு மட்டுமல்ல, இன் னும் சிறப்பாக இறைவனுக்கும் பிள்ளைகள் ஆகின்றனர். இதனால் இறைவனின மகிமை உலகெங்கும் பாவித் துலங் குகின்றது மணவாழ்வாலும், மண அன்பாலும் நெருங் கிய சமூகத்தைப், படைத்தவரே ஏற்படுத்தி அதற்குரிய சட்டங்களையும் அவரே அமைத்துள்ளார்." (இன். உல. திரு. 48) இவ்வாறு மணமக்கள் ஒருவரை ஒருவர் அன்பு செய்யவும், அனைத்திலும் பிரமாணிக்கம் தவறாது வாழ வுப, ஒருவருக்கொருவர் துணைபுரியவும், தம் பிள்ளை களைக் கடவுளின் திட்டங்களுக்கு ஏற்ப நடத்தவும் வேண்டிய ஆற்றலை அளிக்கும் அருட் சாதனமே கிறிஸ் தவத திருமணமாகும்.

அதிகாரம் 2

### திருமணத்தின் மாண்பு

**உயிரின் ஊற்று:-**

இறைவனின் திட்டத்திற்கேற்ப குடும்பமே மனித வாழ்வின் ஊற்றுக விளங்குகின்றது. குடும்பம் என்ற தொட்டிலிலே குழந்தையானது முழு மனித உருவாக் கத்தைப் பெறுகின்றது என்று மனிதன் தன் தாயின் வயிற்றிலே கருவாக உருவெடுக்கின்றானே, அன்றே அவனது உடல், உள வளர்ச்சி ஆரம்பமாகிறது. பெற் றோரின் அன்பையும், ஆதரவையும் அனுபவித்திராத குழந்தைகள் முழு மனித வளர்ச்சியைப் பெறமுடியாது வாழ்க்கையிலே பெரிதும் பாதிக்கப்படுவதை அனுபவத் திலே காண்கின்றோம். அழகுமிக்க விலையுயர்ந்த எத்த னையோ பொருட்களை ஒரு நாளிலே இலகுவாக உருவாக் கலாம். ஆனல் பொறுப்புள்ள ஒரு முழு மனிதனை உருவாக்கும் பொறுப்பு அளவிடற்கரியது. இப்பாரிய பொறுப்பையே தம்பதிகள் திருமண நாளில் பெருமை யோடு ஏற்றுக்கொள்கின்றனர். ஒரு குழந்தை முழு மனித வளர்ச்சியை அடைவதற்குப் பெற்றோரின் அன்பும், அரவணைப்பும், ஆதரவுமே அடிப்படையாகத் தேவைப்படுகின்றது இதனல் குடும்பமே மனிதனுக்கு உயிரும், ஊட்டமும் அளிக்கும் மையமாக விளங்கு கின்றது.

**திரித்துவமும் குடும்பமும்:—**

குடும்பமானது இயற்கைக்கு மேற்பட்ட முறையில் தெய்வீகத் தன்மையைக் கொண்டு விளங்குகின்றது. எவ்வாறெனில், மூவொரு கடவுளின் முடிவில்லா அன் புறவே எந்த ஒரு சமூக அமைப்பிற்கும் அடித்தளமாய் அமைகின்றது. தந்தை, மகன், ஆவி என்னும் இறை ஆட்கள் உன்னதமான குடும்ப உறவினுலேயே பிணைக் கப்பட்டு, ஒருவருக்கொருவர் தம்மையே நித்திய கொடையாக அர்ப்பணித்துத் தம்மைத்தாமே பகிர்ந் தளித்து வாழ்கின்றனர் இவ்வுன்னத உயர்ந்த தம் குடும்பத்தின் சாயலிலேதான் இறைவன் மனிதனை ஒரு குடும்பமாக உருவாக்கினுர் நாம் கண்ணாலே காணாத கடவுளின் அன்புறவு, காணக்கூடிய அளவில் குடும்பத் திலே புலனுகின்றது கணவன் மனைவிக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்குமிடையே நிலவும் அன்பு, மூவொரு கடவு ளாகிய நித்திய குடும்பத்தில் தோன்றி நிற்கும் நிலை யான அன்பின் பிரதிபலிப்பாகும். மூவொரு கடவுளின் அன்பு இடைவிடாது பிரதி வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. இந்த அன்பின் விளைவால் இறைவன் மனிதனைப் படைத்தார். கணவனும், மனைவியும் தமது அன்பின் ஒன்றிப்பால் ஒரு புதிய மனித உயிரை உரு வாக்குகின்றனர். இவ்வாறு இறைவனுடைய படைப் புப் பணியிலே அவர்கள் பங்குகொள்ளுகின்றனர். இதற்கு ஒருசிறந்த எடுத்துக்காட்டாகக் கிறிஸ்து பிறந்த குடும்பம் திகழ்கின்றது. சூசையின் பரந்த மனமும், மரியாளின் அன்பு உள்ளமும், கிறிஸ்துவின் கீழ்ப்படிவும் ஓர் உத்தம குடும்பத்தின் வரைவிலக்கணமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர்-19

### மிக்கேயாஸ் - 4

மிக்கேயாஸ் யூதா, இஸ்ராயேல் நாட்டினர்களின் குற்றங்களுக்காக ஆண்டவரின் தண்டனையை, அழிவை எடுத்துரைத்து எச்சரித்தாலும் இறைவனின் இரக்கத்தை நினைவூட்டி எதிர்கால நம்பிக்கையை வளர்க்கின்றார்.

''நான் இருளில் இருந்தாலும் ஆண்டவர் ஒளியாயிருப்பார்'' ''உன் மதில்களைக் கட்டும் நாள் வருகிறது'' என்ற வசனங்கள் நம்பிக்கையைத் தருகின்றன மேலும் நம் அக்கிரமங்களைத் தம் காலடியில் மிதித்துப் போடுவார். ''நம் பாவங்களையெல்லாம் ஆழ்கடலில் எறிந்து விடுவார்'' இத்தகைய ஊக்கமூட்டும் வார்த்தைகள் மக்களின் வாழ்வில் எதிர்கால நம்பிக்கையை வளர்க்கின்ற வார்த்தைகள். இறைவாக்கினர் எவ்வளவு தான் கடுமையாகக் கண்டித்து எச்சரித்தாலும் அவர் இறைவன் மேலும் மக்கள் மேலும் கொண்டிருந்த ஆழமான அன்பை எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றன

இறைவாக்கினர் மக்களைத் தூய்மைப்படுத்த சிறந்தவழி அவர்களைத் தண்டிப்பதும் துன்புறுத்தலும் ஆகும் என உணர்ந்திருந்தார். ஆகையால் அவ்வாறான கண்டிப்பான போதனையை வழங்கினர். இருந்தபோதிலும் மனம் வருந்தும் போது இறைவன் அவர்களை மன்னிப்பார் அவர்களது பாவங்களை ஆழ்கடலில் எறிந்து விடுவார் எனக்கூறி நம்பிக்கையூட்டி மன மாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றார்.

மிக்கேயாசின் போதனைகள் இன்றும் பொருத்தமுடையதாகவே உள்ளது. இன்றைய சமூக, சமயத்தலைவர்கள், அதிகாரிகள் செல்வந்தர்கள் நீதிவழங்குபவர்கள் ஆகிய அனைவரையும் சிந்திக்கத்தூண்டுகின்ற போதனையாகவுள்ளது அலுவலகங்களில் தொழில் கூடங்களில் பொதுதாபனங்களில் பணிபுரின்றவர்கள் நேர்மையைக்கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றார்

''மனிதா, நல்லது எதுஎன உனக்கு அவர் காட்டியிருக்கிறாரே! நீதியோடு நடத்தல், அன்பு கூர்தல் உன் கடவுள் முன்னிலையில் தாழ்ச்சியோடிருத்தல், இவையன்றி வேறெதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார். எனக்கூறி அனைவரையும் மனச்சாட்சியின்படி வாழ அழைப்பு விடுக்கின்றார்.

கி. சா. பங்கிராஸ்

**அறிந்துகொள்ளுங்கள் 75**

## உணவு பற்றி ஒழுங்கு

இராயப்பர் யோப்பாவில் தோல் பதனிடும் சீமோனுடைய வீட்டின்மேல் தளத்தில் உச்சிவேளையில் செபித்துக்கொண்டிருக்கும்போது ஒரு காட்சி கண்டார் கப்பற்பாயைப் போன்ற ஒரு விரிப்பு நான்கு மூலைகளிலும் கட்டி தரையை நோக்கி இறக்கப்பட்டது. அதில் தரையில் ஊர்வன, நடப்பன, வானில் பறப்பன யாவும இருந்தன. அப்போது 'இராயப்பா எழுது இவற்றை கொன்று சாப்பிடு' என்ற குரல் கேட்டது. அதற்கு இராயபபர் ''வேண்டாம் ஆண்டவரே தீட்டுப் அசுத்தமுமான எதையும் சாப்பிடமாட்டேன்'' என்று கூறினர் அ. பணி (10:9-14) இப்படி இராயப்பர் கூற என்ன காரணம்.

லேவியராகமத்தில் 11ஆம் அதிகாரம் உணவுத் தூய்மை பற்றி பேசுகின்றது சட்டத் தூய்மை ஒழுங்குகளைப்போல் உணவுத் தூய்மை பற்றிய ஒழுங்குகளும் இஸ்ராயேல் மக்களுக்கு முக்கியமானது. தூய்மையானவை, தூய்மையற்றவை என உணவுப் பொருட்களை புற அடையாளங்களைக் கொண்டு பிரித்தனர். தூய்மையானவற்றை உண்ணலாம் மற்றவை தீட்டு உள்ள உண்ணக்கூடாத உணவுகள்.

மிருகங்களில் உண்ணக்கூடியவை விரிகுளம்புடைய அசை போடுகின்ற யாவும் உண்ணலாம். ஏனையவை உண்ணக்கூடாதவை. (ஆடு, மாடு, மான், மரை) ஆனல் அசைபோடும் விரிகுளம்பு அற்ற மிருகங்கள் (ஒட்டகம்) அசை போடாத விரிகுளம்புடைய மிருகங்கள் (பன்றி) போன்றவை அசுத்தமான உண்ணத் தகாத மிருகங்கள்.

நீரில் வாழ்பவற்றில் சுத்தமான உண்ணக்கூடியவை சிறகுகளையும் செதில்களையும் உடைய எல்லாம் உண்ணலாம். ஆனல் நீரில் வாழும் உயிரினங்களில் செதில்களும் சிறகுகளும் இல்லாதவை அசுத்தமானவை தீட்டுள்ளவை.

பறவைகளில் சுத்தமான உண்ணக்கூடியவை. தமது உணவை தங்களுடைய கால்களால் பிடித்து பிய்த்து உண்ணும் பறவைகள் அசுத்தமானவை (காகம், கழுகு பருந்து நாரை) உண்ணக்கூடாத பறவைகள். ஏனைய பறவைகள் உண்ணக் கூடியவை.

—இ. ம. ஜெ[illegible]

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசகர்களே!

''நாடக 'வேடம்' கூட வராது! நாளைய உலகம் இவரை விடாது'' என்று கூறுகிறன் எம்மூர் கலைஞன்! போலி வேஷங்கள் என்றே ஒரு நாள் கிழிக்கப்பட்டே தீரும். நம் மத்தியிலும் பலர் சமுதாயத்தில் நல்லவர்களாக கொடையாளிகளாக வேடங்கள் பூண்டு வருவதை கண் கூடாக கண்டு வருகின்றேம்.

ஆனல் —? ''கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளுக்கு'' என்ற முதுமொழிப்படி இவர்களின் வேடம் விரைவில் கிழிக்கப்பட்டு உண்மை சீக்கிரம் அம்பலத்திற்கு வரும்!

இதையே திருநூல் 16/13- ல் நேர்மையானவற்றைப் பேசுகிறவன் நேசிக்கப்படுவான்'' என்று ஆணித்தரமாக கூறுகின்றார்.

நமது முதுமொழியினரும்! விடாக்கண்டனக கூறும் பதிலுரை.

''உண்மை ஊழியனை ஊரே போற்றும்'' என்று பதிலடி தருகிறர்.

நமது மனச்சாட்சி இருக்கின்றதே அது இறைவனின் குரல் என்பார்கள். இறைவன் நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்வதில்லை. நமது ''நல்ல'' மனச்சாட்சிமூலம் எம்முடன் தொடர்பு கொள்கிறர். செய்ய வேண்டியவை, தவிர்க்க வேண்டியவை அனைத்தையும் முன் கூட்டியே உணர்த்தி வைக்கிறர்.

இதை நம் முன்னேர் சாதாரண முதுமொழி மூலம் ''யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே'' என்றும்-

''கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே'' என்று இரு முதுமொழிகளில் நம்மவரை எச்சரிக்கிறர்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த நம் திருநூல் ஆசிரியர் இவற்றை ஒரு வசனத்தில் தெட்டத் தெளிவாக்குகிறர்.

16/18 இல் ''அகங்காரம் முன்னும் அழிவு பின்னும் வரு முன்னே. மனம் செருக்குறும்!'' சிந்தியுங்கள்- சந்திப்பேன்.

### வாரம் ஒரு சிந்தனை

''உண்மையாக மனிதன் மனம் மாறினல் -அவன் மனம் மாரியாக வேண்டும்''

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்

ஊக்குவியுங்கள்
**வாசகர்களே**

பாதுகாவலன் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள் ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' நீங்கள் அறிமுகப் படுத்தாமல் எப்படி மற்றவர்கள் அறியமுடியும்? மறை வட்டத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்க குடும்பங்களும் வாரம் தவறுது ''பாதுகாவலன்'' வாசிக்கப் பழகிக் [illegible] வேண்டும்.




ஒளி: 3 | எம் விழிகளின் ஒளி யேசு
சுடர்: 17 | எம் வாழ்வின் வழி யேசு

### வாரம் ஒரு வார்த்தை

நான் சொன்ன சொற்கள் உங்களுக்கு
ஆவியும் உயிருமாகும்.

அரு. 6; 63.

### வளர்ந்து வலிமை பெறுகிறர். (தொடர்ச்சி)

சூசை மரியாள் தொடங்கிய குடும்பம்
இயேசுவின் வரவால் ஏக்கம் நீங்கிப்
பாசம் அன்பு பண்பு மலர்ந்து
பேசுவோர் எல்லாம் அதனையே பேசும்
பெரும் புகழ் பெற்றுப் பெருமை மிகுந்தது!
நாசரேத் தூரின் நற்குடும் பங்களில்
இலட்சியக் குடும்பமாய் இருந்ததும் அதுவே!
அதுமுத லாக அவனியில் உள்ளோர்
சூசையப்பரின் தோற்றத்தைக் கண்டால்
தூயவர் என்றே சொல்லி வணங்கினர்!
மரியாள் தம்மை 'மாதா' வென்று
இயேசு மட்டுமா அன்புற அழைத்தார்?
பாசம் மிகுந்த பாலர்கள் அனைவரும்
ஆசை மிகுந்தே 'அம்மா' வென்றனரே!

கவிஞர் கண்ணதாசன்
இயேசு காவியம்.

### குரங்குக் குட்டி (குட்டிக்கதை)

''நான் சொல்வது பிரசங்கமல்ல, உங்கள் சிந்தனைக்குச் சிறுகதை. கதையைக் கேட்டு விட்டு வீடு செல்லுங்கள்,'' என்றர் குருவானவர். சிறுவர் முதல் முதியோர்வரை கதை கேட்க ஆவலாய் இருந்தனர்.

படகிலே வீடு திரும்ப பலர் ஏறினர். கடல் அமைதியாக இருந்தவேளை, குரங்குக்குட்டி ஒன்றுடன் ஒரு இளைஞன் படகில் ஏறினன். அக்குட்டி அவனுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தது.

கடல் நீரைக் கிழித்துக் கொண்டு படகு விரைந்தது. நடுக்கடலை அடைந்த வேளை குரங்குக்குட்டி கீச்சிட்ட வண்ணம், அங்கும் இங்கும் பாய்ந்தது. படகில் இருந்தவர்கள் பயத்தால் பதறித்துடித்து அங்கும் இங்கும் சாய்ந்தார்கள். ஆட்களோடு படகும் சரிந்தது. பயணிகளில் பெண்களும் குழந்தைகளும் இருந்தனர். வீடு நோக்கித் தொடங்கிய பயணம், வான் வீடு நோக்கிய பயணமாக மாறிவிட்டது. இந்த அவல முடிவு எதனுல் ஏற்பட்டது? குரங்குக் குட்டியைச் சீண்டிப் பார்த்து சிரித்து மகிழ ஒரு சிறு பயல் ஆசைப்பட்டு, தகாத முறையில் அதை சீண்டிவிட்டான். மக்களே! இக்கதை சிரிப்பதற்கல்ல சிந்தித்துப் புத்தி தெளியவே கூறினேன். சிறப்புடன் வாழ சென்று வாருங்கள்,'' என்று குருவானவர் கதையை முடித்தார்

அ. தி. அன்பு ராஜ் லெம்பேட்
அங். எண். 89.

★ குட்டிக்கதையிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்ட பாடம் என்ன என்பதை சுருக்கமாக எழுதி அனுப்புங்கள்.

**★ கவனிப்பு! அன்புக்குரல்:**

கண்மணிகாள்! கண்மணிகாள்!!

கவனமாய்ப் படியுங்கள், படியுங்கள். அங்கத்துவம் பெற விரும்பு வோர்க்கு அன்புடனே வழி முறையைக் கூறுங்கள். கண்மணிகளின் ஆக்கங்கள் அனைத்திலும், போட்டியில் பங்கு பற்றும் போதும், தொடர்பினை அன்பு விழிபுடன் மேற்கொள்ளும்போதும். 'அங்கத்துவ எண்ணை' அவசியம் எழுதிட வேண்டும்: ஆண்டு பதினென்றைக் கடந்தவர்கள் ஆண்டுதனைக் குறிப்பிட்டே ஆக்கங்களை அனுப்புங்கள். உங்கள் ஆக்கங்கள் கண்டு உள்ளம் உவகை கொண்ட போதும் போதிய இடவசதி இல்லையே! என்ற ஏக்கம் என்னைத் தாக்கவே செய்கிறது. 'உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்திடவே' நாம் கற்றுக் கொள்ள வேண்டும். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' எனப் புரிந்து வாழ வேண்டும். அன்புக் குழந்தை யேசுவின் அன்புக்கரம் என்றும் எங்கும் உங்களை வழிநடத்தும்,

அன்பின்
அன்பு விழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் தினம்

உழைப்பு, உலகில் வாழும் மனிதர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. சமுதாயத்தின் நல்வாழ்வு உறுதியான உழைப்பிலேயே தங்கியுள்ளது. உழைப்பின் பயனாக உலகை நன்மைகளால் நிரப்பும்படி இறைவன் ஆதித்தாய் தந்தையரைப் பணித்தார். " உழைக்காதவன் உண்ணுதிருக்கக்கடவான் " என்று புனித சின்னப்பர் கூறியுள்ளார். சமுதாயத்தின் நல் வாழ்விற்காக ஆற்றும் எத்தொழிலும் ஈனமற்றது. அகத்தியமானது: மகத்துவம் வாய்ந்தது. மனச்சாட்சிக்குப் பங்கமின்றி, தன் உடலை வருத்தி உழைக்கும் ஒவ்வொருவனும் சிருட்டிப்பில் பங்கு கொள்ளுகின்றான். உயிருக்கு ஆதாரமான உணவைத் தமது பிரயாசைமூலம் அளிப்பவர்கள், சுகாதாரமான சூழலில் வாழத்துணைபுரிபவர்கள், அறிவுப் பசியைத்தீர்ப்பவர்கள், அன்றாட தேவைக்கு அகத்தியமானவற்றை வழங்குபவர்கள், இல்லங்களைச் சமைப்பவர்கள் அனைவரும் சமுதாயச்சிருட்டிப்பிலும் நல் வாழ்விலும் பங்கு கொள்ளுகின்றனர்.

தொழிலின் மகத்துவத்தை உலகத்திற்கு உணர்த்த விரும்பிய இறைவன் தமது திருக்குமாரன் ஓர் தொழிலாளியின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் வளரத் திருவுளம் கொண்டார். அரசபரம்பரையில் தோன்றிய புனித வளனுர் தமது அந்தஸ்திற்கேற்ற ஆடம்பர வாழ்வைத் துறந்தார். சமுதாயம் அன்று புறக்கணித்த தச்சுத் தொழிலை மகிழ்வுடனேற்றுர். தமது உடலை வருத்தி, தரமான தளபாடங்களைச் சமைத்தார். உண்மை, நேர்மை, கிரமம் என்ற சிறந்த பண்புகளுடன் பணியாற்றிய புனிதவளனுர் பிரபல்யமடைந்தார். அவர் சமைத்த பொருட்களை மக்கள் ஆவலுடனும் நம்பிக்கையுடனும் வாங்கினர். அவரின் அரவணைப்பில் வாழ்ந்த திவ்வியபாலனும் தொழிலின் மகத்துவத்தை உணர்ந்தவராக, தச்சன் மகன் என்று அழைக்கப்படுவதை ஈனமாகக் கருதாது பணிபுரிந்தார். தொழிலாளருக்கு முன்மாதிரிகையாக இருவரும் திகழ்ந்தனர்.

விஞ்ஞான விருத்தியின் விளைவாக தொழிற்சாலைவேலைகள் இயந்திரமயமாக்கப்படுகின்றன. மனிதசக்தியின் முக்கியத்துவம் குறைவடைந்து வருவதினுல் பல தொழிலாளர் தங்கள் வேலையை இழக்கும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. தொடர்ந்து பணியாற்றுபவர்களும் நிறுவனங்களின் தயவில் வாழவேண்டிய நிலை ஏற்படலாம். எனவே தொழிற் சங்கங்கள் மேற்படியான நிலை ஏற்படா வண்ணம் தகுந்த அரண்களை அமைத்துக் கொள்ள வேண்டும். தொழிற் சங்க நிர்வாகிகள் சுயநலமற்றவர்களாக சங்கத்தின் நலனையே முக்கிய நோக்கமாகக்கொண்டு பணியாற்ற வேண்டும். பாமர மக்களைத் தங்கள் பசப்புவார்த்தைகளால் ஏமாற்றி நிர்வாகத்தைக் கைப்பற்றி, தொழிலாளியின் முதுகிலிருந்து சவாரிசெய்யும் தலைவர்களையும் நாம் கண்டு வருகின்ருேம். பட்டம் பதவிக்காக, தங்கள் இலட்சியங்களைக் காற்றில் பறக்கவிட்டு தொழிலாளரை இக்கட்டான நிலைக்குத்தள்ளி தங்கள் கொள்கைகளுக்கு எதிர்மாறான வாழ்க்கை நடாத்துபவர்களையும் நாம் கண்டுவருகின்ருேம். இத்தகைய சந்தர்ப்பங்களில் தொழிலாளி இருதலைக் கொள்ளி எறும்பைப் போல் சங்கடமான நிலையில் அல்லற்படுகின்றான்.

மலரும் மேதினம் தொழிலாளியின் சுபீட்சவாழ்க்கைக்கு வழி வகுப்பதாக. சமுதாய நன்மையை மனதிற் கொண்டு தன் அழைப்பை ஏற்று தொழிலாளரின் நலனைச் சிந்தையிற் கொண்டு காலத்திற்கேற்ற வகையில் தங்கள் திட்டங்களை மறுபரிசிலனை செய்து செயற்படட்டும். தொழிலாளருக்கு முன் மாதிரியும் பாதுகாவலருமான புனித வளனுரின் புனித பண்புகளை தொழிலாளர் பின் பற்றுவார்களாக.

A. S. லோறன்ஸ் கிறிஸ்தவ
தொழிலாளர் இயக்கம்
யாழ். மறை வட்டம்

---

## நினைவஞ்சலி

60-ஆம் நாள் | 6-ஆம் மாதம்





வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை | மேரி திரேசா சந்தியாப்பிள்ளை
மண்ணில் விண்ணில் | மண்ணில் விண்ணில்
18-11-1917 04-03-1989 | 01-04-1923 04-11-1988

பத்துமதி சுமந்துருகிப் பெற்றுக் காத்துப்
பாலூட்டி வளர்த்தணைத்த செல்வத் தாயே
உத்தமராய் மக்களெமை உயர்த்த வாழ்வில்
உடலுருகி உழைத்து வந்த அன்பின் தந்தாய்
புத்திரரைப் பார்ப்பதற்காய் வெளிநாடேகிப்
புதுமையெனத் துணைவியோடு துணைவனாக
நித்தியரின் வானுட்டில் இணைந்தீர் எங்கள்
நினைவினிலே என்றென்றும் நிலைத்தே வாழ்வீர்.

இவர்களது ஆன்ம சாந்திக்காக 06–05–1989 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றி இவர்களின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு உங்களை அழைக்கிருேம்.

லிசிய இல்லம். சுவாமி மரிய செபஸ்ரியன் அ. ம. தி.
இளவாலை. A/79.

---

## அரிப்புத்துறை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகும். பின் புனித வளனுரின் திருச் சுரூபம் அங்கிருந்து பவனியாக ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பங்குக் குரவரால் சுரூப ஆசிரும் வழங்கப்படும்.

தொடர்ந்து விழாவைச் சிறப்பிக்கும் முகமாக இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியும் இடம்பெறும் பின்பு மாலை கலைநிகழ்ச்சிகளும் போட்டியில் வெற்றிபெற்ருேருக்கு பரிசில்களும் வழங்கப்படும். இறுதியாக கழகத் தலைவரின் நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவுறும்.

சூ. பிறின்சிலி லியோன்
அரிப்புத்துறை

---

## 3-ம் வருட நினைவஞ்சலி



திரு மோசேஸ் டானியல்
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)
தோற்றம்: 24-2-1907 மறைவு: 29-4-86

ஈராண்டு காலம் ஓடிமறைந்தாலும்
பாராது உன்முகம் நாம் தவித்தாலும்
எந்நாளும் உம்மை மறவோம் ஐயா
எப்பொழுதும் உமக்காய்
வேண்டுகின்ருேம் ஐயா

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ் மரியன்னை பேராலயத்தில் 29-4-89 சனிக்கிழமை காலை 6-30 திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்கு பற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்ருடுமாறு அன்புடன் வேண்டுகின்ருேம்.


இவரின் பிரிவால் துயருறும்
மக்கள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

திருமதி
அல்பிரட் சின்னத்துரை
36, அடப்பன் வீதி
யாழ்ப்பாணம் A/80

---

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி
## எம் நினைவில் என்றும் நிலைத்திருக்கும்

அல்விறெட் மரியநாயகம்
மலர்வு: 17-09-1923 உதிர்வு: 02-04-1989



பரிசுத்த தந்தையே அனைத்துக்கும் ஆதிகாரணரான இறைவா, இன்னல்கள் நிறைந்த இவ்வுலகிலிருந்து உம்மால் அழைத்துக்கொள்ளப்பட்ட உமது அடியான் அல்விறெட் மரியநாயகத்துக்கு முடிவில்லா இளைப்பாற்றியை அளித்தருளும். சோதி மிகுந்த உமது ஒளியில் அவரது ஆன்மாவை நிறைத்தருளும் உமது திருக்குமாரனும் எங்களாண்டவருமான கிறிஸ்து வழியாக உம்மை வேண்டுகின்ருேம் ஆமென்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 2-5-1989 செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் கலந்துகொண்டு இவரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிருேம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
சகோதரர், உறவினர்.

நல்லாயன் வீதி,
சில்லாலை. A/81

---

## ஓவியப் போட்டி - 6

"பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள்மேல் இறங்கும் காட்சியை 12" × 10" ஓவியமாக வரைந்து 24-5-89ஆம் திகதிக்கு முன் பாதுகாவலன், அ.பெ.இல-2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். புத்தகங்களில் இருந்து பிரதி பண்ணுது உங்கள் சிந்தனையையும் ஓவியத்திறனையும் வெளிப்படுத்தும் விதத்தில் ஓவியப்போட்டியில் பங்குபற்றுங்கள். அதி சிறந்த ஓவியம் 2–6-89 பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுப்பரிசுத் தொகையாக ரூபா25/- உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.



இயேசுவின் உயிர்ப்பு: முதலாம் இடம்
அருள் குமாரி செல்லையா, நல்லாயன் ரோட், சில்லாலை.

---

## புனித சூசையப்பர் திருவிழா

### அச்சுவேலி

ஏப்பிரல் 22—கொடியேற்றம் மாலை 6-00 செபமாலை, திருப்பலி, மறையுரை.

ஏப். 23—28—தினமும் மாலை 6-00 செபமாலை, திருப்பலி, மறையுரை.

ஏப். 29—நற்கருணைவிழா.

ஏப். 30—திருப்பலியும் திருச்சுரூப பவனியும்.

மே. 1 திருநாள் திருப்பலி காலை 6-30.

A/82 பங்குத்தந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

## அமைதிக்காக ஜெப வழிபாடு

பத்திமா நாயகியின் அனைத்துலக அப்போஸ்தல அணியைச்சார்ந்த பொதுநிலையினர் குழு ஒன்று பிளவுபட்டிருக்கும் எம் நாட்டில் அமைதி ஏற்பட செபவழிபாடுகளை ஆரம்பித்துள்ளது.

இதன் ஆரம்ப வழிபாடு மார்ச் 2-ம் திகதி கொழும்பிலுள்ள பத்திமா நாயகி ஆலயத்தில் இரவு ஆராதனையாக அமைந்தது. இப்பங்கு பல இன மக்களைக் கொண்டதாகும்.

ஆறு ஆண்டு காலமாக சிங்கள, தமிழ் இனப்பிரச்சினையால் மேற்கொள்ளப்பட்ட வன்செயல்களினால் நாடு அமைதியின்றித் தவிக்கின்றது.

கொம்பனித்தெருவில் நடைபெற்ற இரவு ஆராதனையில் ஏனைய பங்குகளிலிருந்தும் பல சிங்கள தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

இக்குழு ஏறக்குறைய 25 பங்குகளில் செயற்பட்டு வருகிறதென்றும், இச்செப வழிபாடுகளைத் தொடர்ந்து கொழும்பு மறைவட்டத்திலுள்ள 103 பங்குகளுக்கும் இது விஸ்தரிக்கப்படும் என்றும் இதன் ஆன்ம இயக்குநரான பிதா பிளசிடஸ் டி சில்வா கூறியுள்ளார்.

பத்திமா நாயகியின் திருச்சுருபம் 1952-ல் இலங்கைக்கு வந்ததைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் பின்னர் அகில உலக பத்திமா அணியுடன் இணைக்கப்பட்டது. அப்போது அது நீல அணி என அழைக்கப்பட்டது.

## இந்திய பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ உயர்கல்வி வாய்ப்பு

கிறிஸ்தவத்தில் உயர்கல்வி பெறும் வாய்ப்புகள் இந்திய பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களில் அதிகரித்துள்ளன.

கிறிஸ்தவ உயர்கல்விக்கான அனைத்திந்திய சங்கம் நடத்திய ஆய்வின்படி இவ்விபரம் தெரிய வந்துள்ளது. பஞ்சாபிலுள்ள பாட்டியாலா பல்கலைக் கழகத்தில் மெய்யியல் துறையில் கலாநிதிப் பட்டம்வரை சமயம் கற்கப்படுகின்றது. பாட்டியாலா குர்மத் கல்லூரி, அமீர்தசரஸ் குரு நானக் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் சமயத் துறையில் கிறிஸ்தவமும் ஒரு பகுதியாக இருக்கின்றது.

ஷில்லாங் பல்கலைக்கழகம், கேரளத்திலுள்ள கள்ளிக் கோட்டை பல்கலைக்கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகம், மைசூர், மங்களூர் பல்கலைக் கழகங்கள், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கிறிஸ்தவ உயர்கல்விப் பீடங்கள் உள்ளன.

தாம்பரத்திலுள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, பம்பாய் புனித சவேரியார் கல்லூரி ஆகியவற்றில் இன்றைய சமூக, சமய, கலாசார பிரச்சினைகளில் கிறிஸ்தவத்தின் நிலைப்பாட்டை ஆராய்ந்து, ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட கிறிஸ்தவ உயர்கல்வி அளிக்கப்படுகின்றது.

## விரிந்த வில் வாகனத்தேறினூர்

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலைமேல் ஏறி நின்று மன ஏக்கத்துடனும் துயரத் தாக்கத்துடனும் சோர்ந்து நின்ற தன் அடியவர்களின் துன்பத்தைப் பார்த்தார் இயேசு. எல்லையற்ற இன்பமுறவும் பிரிவுக் கண்ணீரைத் துடைக்கவும் அறம் நிறைந்த அழகுச் சொற்களால் அடியவர்களுக்கு ஆறுதலும் ஆசீரும் அளித்தார்.

விண்ணகம் செல்லும் வேளை அண்மியது. திருமகன் இயேசுவோ அழகிய தாமரைத் தடாகத்தின்மேல் எழுந்து தோன்றும் ஒளிமிகுந்த சுடர்களை உடைய கதிரவன்போன்று அருளைப்பொழிந்து காணப்பட்டார், அன்புருக வளனைப் பார்த்துத் தம்முடன் மேலே எழுந்து வருமாறு பணித்தார்.

''புண்ணைக் குணம் செய்து உயிர்காக்கும் மருந்தினைப் போன்றவனே! கண்ணைக் காக்கும் இமைபோல் நான் மண்ணைக் காக்கும் பொருட்டு என்னை நீ இவ்வுலகில் காத்தாய் அதனால், இனிமேல் நீ விண்ணைக் காக்கும் மன்னனாய் விளங்கப்போகிறாய். தாவீது அரசர் பரம்பரையில் பெருமையுடன் உதித்த நீ மண்ணையும் விண்ணையும் அழியாப் புகழுடன் ஆளும் அரசனாய்த் திகழ்வாய். நான் மீட்டுக்காத்த மனித இனம் நலம் பெறும் வண்ணம் வானக இறை தந்த மகுடத்தை நீ அணிவாய்! வான் தரும் வளங்களைத் துய்த்து இன்புற விண் மீன்கள் உலவும் உலகிற்கு உயர எழுவாய். வருவாய்.''

வளனின் இதயம் பூரித்தது. திருமகனின் பொன்னடிகளைப் போற்றினார். இந்த இன்பக் காட்சியைக் கண்டு வானவர் மகனையும் வளனையும் வாழ்த்தினர். அவ்வேளை

''அருளில் வீங்கிய ஆண்டகை
பால் வளன்
மருளில் வீங்கிய வையம்
விட்டேறினன்''

இன்பக் களிப்பு நிறைந்த தூயவர்கள் சூழ, வானவர் கணங்கள் வணங்கி நிற்க, ஒளி மிகுந்த கதிரவனும் நிலவும் போன்று திருமகன் இயேசுவும் திருநிறை வளனும் மகிழ்ச்சியுடன் விண்ணுலகு ஏகினர்.

மலையடியில் இமைகொட்டாது நின்றவர்களின் வியப்பு ஒருபுறம்! துயரம் மறுபுறம், அவர்களின் துன்பத்தைப் போக்குவதற்கு விண்ணில் முகை விரித்தது போன்று அழகிய மேகம் ஒன்று இருவரையும் மூடிக்கொண்டது. இவ்வாறு, இயேசுவும் வளனும் நிறைந்த ஒளியுள்ள மேகமாகிய தேரில் (விரிந்த வில் வாகனத்து) ஏறி வானகம் சென்றனர்.

வஞ்சப்பேயின் தந்திரத்துக்குட்பட்டு ஆதிமனிதர் இழைத்த பாவத்தால் அடைபட்ட வான் வீடு, அலைகள் தவழும் கடலாற் சூழப்பட்ட உலகத்தைத் திருக்குமரன் காத்து மீட்ட அருட்செயலால் எட்டுத் திக்குகளிலும் வாழும் மனிதகுலத்துக்குத் திறக்கப்பட்டது.

## வான்மகள், மீன்மகள், கோன்மகள்

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களது வேண்டுதல்களால் மனமிரங்கிய இறைவன் மனிதனாகப் பிறப்பதற்கு தன்னைக் கருவாகச் சுமப்பதற்கு முன்னர் சில முன்னேற்பாடுகளைச் செய்ய விரும்புகின்றார்.

கன்னி ஒருத்தியே அதுவும் தாயின் வயிற்றிலேயே சென்மவினை அகற்றப்பட்ட கன்னிகையே தன் தாயாக விளங்கப் போகின்றவள். எனவே தன்னைக்கருவாகச்சுமப்பதன்மூலம் அவள் கன்னிமைக்கு, கற்புக்கு இழுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக அவளை, விரத்தனாக வாழச் சபதம் பூண்டு கொண்டிருக்கின்ற வளனுக்கு மணம் செய்துவைக்கச் சித்தம் கொள்கின்றார். எனவே, வானதூதனை அழைத்து மரியாளிடம் தூதுசென்று திருமணத்துக்குச் சம்மதிக்கச் செய்' என்று ஆணையிடுகின்றார் அந்தச் சந்தர்ப்பத்திலேதான் மரியாளுடைய குணவியல்புகள் பற்றி இறைவன் வானதூதனுக்குக் கூறுவதாக முனிவர் கூறுகின்றார்.

''என்னைக் கருவாகச் சுமக்கப் போகின்ற அந்தக்கன்னித் தாய், தன் தாயின் வயிற்றிலேயே சென்மவினை அற்றுப் போனவள், தூய உள்ளம், அறிவு, ஆண்மை, துணிவு, தெளிந்த ஞானம், வலிமை அருள் மாண்பு சூழ்ச்சி, ஆகிய குணங்களை குறைவற்ற வரங்களாகக் கொண்டவள்.'' (திரு. 27)

அதுமட்டன்று ''இவள் பிறந்தபோது காரணமறியாமலே உலகத்தோர் பேரின்பக் கடலிலே மூழ்கினர், இவளே நம் தலைவி என்று வானவர் தொழுது மகிழ்ந்தனர், சூரியனை ஆடையாகவும், சந்திரனை காலணியாகவும், விண்மீன்களை முடியாகவும் கொண்டு பிறந்தவள்

(திரு. 28)

## கலைகளின் வளர்ச்சி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என யாழ். மறைவட்டப் பொதுநிலையினர் ஆணைக்குழுத் தலைவர் அருள் திரு கில்லறி ஜெபநேசன் அடிகள் தமது கருத்துக்களை முன்வைத்தார். சமயமும் பண்பாடும் ஒன்றிற்கொன்று கொண்டும் கொடுத்தும் நல்ல நண்பர்களைப் போல வளர வேண்டும். சமயம் பண்பாடு ஆகிய இரு கூறுகளையும் ஏட்டளவில் பிரிக்கலாமே தவிர நடைமுறையில் பிரித்து நோக்க இயலாதவை எனக் குறிப்பிட்டு தமது கருத்துக்களை முன்வைத்தார். நடுவராக விளங்கிய கவிஞர் விக்ரர் (யாழ். ஜெயம்) அவர்கள் பண்பாட்டின்வளர்ச்சியில் சமயத்தின் தேவையையும், சமயத்தின் வளர்ச்சியில் பண்பாட்டின் தேவையையும் விளக்கி, மனிதன் மனிதனாக வாழ சமயப பண்பாட்டோடு இணையவேண்டும் என்ற கருத்தை எடுத்துரைத்தார்.

அடுத்து நடன நல்லிசைக் கலாமன்றத்தினரின் தாளவாத்தியக் கச்சேரி இடம்பெற்றது. இளம் கலைஞர்கள் இதில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற கலைஅரங்கு நிகழ்ச்சியில், முதல் நிகழ்ச்சியாக செல்வி மதிசேவியர் குழுவினரின் கும்மியும் தொடர்ந்து செல்வி மலர்மதி பிரான்சீஸ் செல்வி கோபினி கார்த்திகேசு ஆகியோரின் மயில்நடனமும் திருமறைக் கலாமன்றத்தினரின் அம்பா நிகழ்ச்சியும் இடம்பெற்றன. இறுதியாக நாவாந்துறை சென்.மேரிஸ் முத்தமிழ் மன்றத்தினர் ஊதாரிப் பிள்ளையின் கதையை நாட்டுக் கூத்துப் பாணியில் அமைத்து ''மனம் மாறிய மைந்தன்'' என்ற நாட்டுக்கூத்தினை வழங்கினர். மின்சாரம் இறுதியில் வஞ்சகம் செய்துவிட்ட நிலையிலும் நிகழ்ச்சிகள் தடையின்றி சிறப்பாக நடந்துமுடிந்தமை குறிப்பிடத்தக்கது.

திரு. வி. பி. பேர்மினஸ் அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டு 5-45 மணியளவில் திருமறைக் கலாமன்றத்தினரின் திருப்திகரமான பங்களிப்பின் கருத்தரங்கம் இனிதே நிறைவடைந்தது.

## விண்ணேற்பு விழா 04-05-89

இறைமகன் யேசுவின் வாழ்க்கைப்பயணம் தம் தந்தை இறைவனை நோக்கி விரைந்த ஓர் நீண்டபயணம். அது விண்ணகத்தை நோக்கிய ஒரு உறவுப் பயணமாகும்.

விண்ணகவாழ்வை இலட்சியமாகக் கொண்டு விரையும் எமது வாழ்க்கைப்பயணம், எம் வாழ்வாக வழியாக பொருளாகக் கொள்ளும் யேசுவின் பயணத்தை ஒத்ததாக அமைத்துக் கொள்வதே கிறிஸ்தவ மார்க்கமாகும். இங்கு யேசு சென்றபாதையின் தன்மையை உணர்தல் அவசியமாகும்.

அவர்சென்ற பாதையானது நேரியது, புரட்சி நிறைந்தது, புனிதம் கண்டது, பிறப்பிலிருந்து இறப்புவரை சுயநல கலப்படம் காணுதது.

எளியோர்க்கு நற்செய்தியும் உள்ளம் நொந்தவர்கட்கு ஆறுதலும் ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்க வேண்டும் என்று அவர்கண்ட இலட்சியப்பாதை தம்மை சிலுவையில் பணயம் வைத்து இரத்தம் சிந்தி உயிர்ப்பலி செய்யும் வரை தூர்ந்து போகவில்லை. அன்பு செய், மனித மாண்பு பெரிது என்று உரைத்ததோடு மட்டும் நில்லாமல் தம்போதனையை சாதனையாக்க பாதையில் பல சவால்களையும் சந்தித்தார். புரட்சிகரமாகவும் புதுமையாகவும் போதித்தவர் எதிர்ப்புகளையும் தோல்விகளையும் கண்டு தளர்ந்து போகவில்லை.

இன்றுபதட்ட நிலையில்பாதை மாறி இலக்கை மறந்து, துன்பத்திலும் சோதனையிலும் மதிமயங்கி கலங்கி நிற்கும் எமக்கு, யேசுவின் இலட்சியப்பாதை ஒரு கலங்கரைத்தீபம். விண்ணகம் எமது உண்மைத்தாயகம் என்றால் யேசுவின் பாதையின் அடிச்சுவடுகளே எமது பாதையின் படிக்கட்டுக்களாகும்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

அப். பணி 1 : 1–11. அவர் மேலே உயர்த்தப் பெற்றூர்.
எபே. 1 : 17–23. தம் வலப்புறத்தில் அமரச் செய்தார்.
லூக். 24 : 46–53. இவற்றிற் கெல்லாம் நீங்கள் சாட்சி.

## பிழை திருத்தம்

உங்களுக்குத் தெரியுமா? போட்டி 23 இன் இறுதி நாள் இதழ் 15 இல் அச்சுப் பிழை காரணமாக 15-4-89 எனத் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. போட்டியின் இறுதி நாள் 15 5-89 என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பதிவு இல: QB / 1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org